# ACTIVE AND LAZY HOUSE-WIVES

TRANSLATED

FROM THE KANARESE

BY

S. DEVASIKAMANY

---

# மூதேவி சீதேவி வீடுகள்

இது

கன்னட பாஷையிலிருந்து

தேவசிகாமணி என்பவரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது


MADRAS

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY

1906

Price 1 Anna.]

[விலை ௧ அணா.

சென்னபட்டணத்துச்

## மார்க்கச் சிறுபுத்தக சங்கத்தார்

# விற்பனைசெய்யும் புத்தகங்கள்.

| | அ. | பை. |
|---|---|---|
| அருணோதய அஸ்தமன ஜெபத்தியானம்... ... | 3 | 0 |
| அற்புதங்களின் வியாக்கியானம்... ... ... | 8 | 0 |
| ஆடவர் கும்மி... ... ... ... ... | 1 | 0 |
| ஆத்தும விவசாயம் ... ... ... ... | 1 | 6 |
| இயேசுவின் சிந்தை ... ... ... ... | 2 | 0 |
| இரக்ஷண்ய காதல் ... ... ... ... | 1 | 6 |
| இருதயக் கண்ணாடி ... ... ... ... | 1 | 6 |
| உவமைகளின் வியாக்கியானம் ... ... ... | 8 | 0 |
| எபேசியர் வியாக்கியானம் ... ... ... | 4 | 0 |
| கர்த்தருடைய ஜெபம் ... ... ... ... | 2 | 0 |
| கற்பனையின்மேல் கற்பனை ... ... ... | 6 | 0 |
| னம்: வீ. வேதநாயகம் ஐயர் விருத்தாந்தம் ... | 2 | 0 |
| காலைத்தியானம் ... ... ... ... | 8 | 0 |
| கிறிஸ்தவ ஜீவியம் ... ... ... ... | 4 | 0 |
| கிறிஸ்துமார்க்க ஆட்சேப சமாதானம் ... ... | 1 | 6 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்களின் பொழிப்புரை... | 8 | 0 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 3 | 0 |
| குடும்ப ஜெபத்துணை ... ... ... ... | 2 | 0 |
| குருட்டுவழி ... ... ... ... ... | 1 | 0 |
| சட்டதிட்டம் ... ... ... ... ... | 8 | 0 |
| சாஸ்திரக்கும்மி ... ... ... ... | 1 | 6 |
| ஜெசிக்காளின் சரித்திரம் ... ... ... | 1 | 0 |
| ஸ்பர்ஜன் ஐயர் செய்த பிரசங்கங்கள் ... ... | 8 | 0 |
| ஞானபத கீர்த்தனைகள், பெரியது ... ... | 10 | 0 |
| ” ” சிறியது ... ... ... | 3 | 0 |
| ” ” அதிலும் சிறியது ... ... | 1 | 6 |
| போதம் ... ... ... ... ... | 1 | 0 |

# ACTIVE AND LAZY HOUSE-WIVES.

# மூதேவி சீதேவி வீடுகள்.

## I-ம் அத்தியாயம்.

மகளைத் திருத்தி வளர்க்காத அன்னை தன் மருமகனுடைய வீட்டுக்கு மகளையல்ல, மாரியை அனுப்பிவைக்கிறவளாயிருப்பாள். எப்படியெனில்:—

நமதழகிய இந்துதேசத்திற்குத் தெற்கிலிருக்கும் கன்னியாகுமரிக் கருகில் ஆனந்தன் என்னும் ஒரு கிரகஸ்தன் வாசம்பண்ணினான்; அவன் பெரும் குபேரனாயிருந்தான். அவனுக்கு நூறாயிரம் ஆடுமாடுகளும், நூறாயிரம் தெங்கு, கமுகு, மா, பலா முதலிய விருட்சங்களடங்கிய தோட்டங்களும், மகா விஸ்தாரமான வயல்நிலங்களும், தானியக் களஞ்சியங்களும் இருந்தன; அவனுக்கு இவ்வளவு பாக்கியங்களெல்லாமிருந்தும் பூரண சந்தோஷத்தை யளிக்கத்தக்க புத்திரபாக்கியமில்லாதிருந்தது; இக்காரணத்தினால் தானும் தன் சௌபாக்கியவதியும் இரவு பகல் மனோகிலேசமுற்றுப்

'பிள்ளையில்லாத வீடும் ஒரு வீடா? பிள்ளையற்ற வீடு சுடுகாடல்லவா?' என்று தெய்வத்தை வேண்டிக் கண்ணீர்விடுவார்கள். ஆனால் சிலகாலம் சென்றபின் தெய்வகடாட்சத்தால் ஆனந்தனுடைய மனைவியாகிய **முத்தம்மாள்** என்பவள் கர்ப்பந்தரித்து ஒரு சுந்தரமான பெண்குழந்தையைப் பெற்றாள். இக்குழந்தைக்குப்பின் அவளுக்கு வேறுமக்கள் கிடையாது.

ஆனந்தனும் முத்தம்மாளும் அபூர்வமாய்ப் பெற்றெடுத்த தங்கள் குமாரத்தியை வெகு செல்வமாயும் அன்பாயும் வளர்த்துவந்தார்கள். அக்குழந்தை பால் மறந்தபின் அதற்கு போஜனமாகக் கொஞ்சநாளைக்குத் தேனும் தினைமாவும், கொஞ்சக்காலத்துக்குப் பாலும் பழமும், கொஞ்சக்காலத்துக்கு விசுக்கோத்தும்பாலும், கொஞ்சக்காலத்துக்குத் திராட்சாசமும் கோதுமை ரொட்டியும், கொஞ்சக்காலத்துக்குக் கோழிமுட்டை பால் பிராந்தி கலந்தும், கொஞ்சக்காலத்துக்குக் கோழிக் குஞ்சு சூப்பிறக்கியும், கொஞ்சக்காலத்துக்கு மாம்பழமும் இளநீரும், கொஞ்சக்காலத்துக்கு மாதளம்பழ ஜல்லியும், கொஞ்சக்காலம் வகைவகையான மிட்டாய்களும் மாற்றி மாற்றிக் கொடுப்பார்கள்; இதல்லாமல் அடிக்கடித் தங்கத்தை இழைத்தும் கொடுத்து வளர்த்தார்கள். பட்டு பட்டாவளிகளையொழிய அம்மகளுக்குப் பருத்தி வஸ்திரம் இருந்ததேயில்லை; அவளுடைய தேகமுழுவதும் கனகாபரணங்களால் நிறைந்து பொன்காய்த்த மரம்போல் பளபளவென் றிலங்கிக் கொண்டிருந்தது.

இவ்வளவு ஆடம்பரத்தோடு வளர்க்கப்பட்டுவந்த அப் பாவையின் குணம் எப்படிப்பட்டதா யிருந்ததென்று இக்கதையை வாசிப்போர் அறிய ஆசைப்படுவார்கள். ஐயோ! அது மகா விபரீதமானதும் விஷத்துக் கொப்

பானதுமாயிருந்தது. மெய்தான், மக்களை அன்பாய் வளர்க்கவேண்டும். ஆனால் அவசியமானபோது சிட்சிக்கவும் வேண்டுமெல்லவா? தண்டனையின்றி வளர்க்கப்படும் பிள்ளைகள் பிசாசுகளைப்போல் வளர்ந்து தங்கள் வீட்டுக்கும் அயலகத்தாருக்கும் பெருங் கேடுகளை வருத்துவிப்பார்கள் என்பது நமதெல்லோருடைய அனுபவமல்லவா? நமது தேசத்தில் 'ஆணை அடித்து வளர், பெண்ணைப் போற்றி வளர்' என்று ஒரு பழமொழி சொல்வார்கள்; இம்மொழி சுத்த அநர்த்தமானது. 'ஆணை அடித்து வளர், பெண்ணைப் பொடித்து வளர்' என்று பழமொழியிருந்தால் நன்றென்று என் அபிப்பிராயம். **ரமணி** யென்று நாமந்தரித்த இப்பெண்ணைப் பெற்றவர்கள் எவ்வளவுக்கு அவளைச் செல்வமாய் வளர்த்துவந்தார்களோ அவ்வளவுக்கும் அவள் கேடுநிறைந்தவளா யிருந்தாள். அவள் ஒரு பிள்ளையை வா என் றழைக்கவேண்டுமானல், பிணமே, இங்கே வா, என்றும், போ என்று சொல்லவேண்டுமானல், பிணமே, போ! என்றும் சொல்வாள். அவள் வாயில் எப்போதும் பிணம், பூதம், பேய், பிசாசு, நாய், கழுதை என்னும் சொற்களே வந்துகொண்டிருக்கும். வளரவளரத் தன் தாய் தந்தைகளையும் கனவீனமாய்ப் பேசத் தொடங்கினள் ஆனல் அவர்களுக்கு மகள் மீதிருந்த ஆசையினல் மகள் எவ்வளவு திட்டினலும் காதுக்குள் இனிய சுரம் நுழைந்ததுபோலிருக்கும். அவர்களுடைய வீட்டைத் தேடிவரும் பந்து மித்திரர்கள் அப்பெண்ணின் குணத்தை யறிந்து 'இவள் சீரழிந்தே போவாள்' என்று சொல்லிப் புறப்படுவார்கள்.

ஆனந்தனுடைய வீட்டில் ஒரு ஏழை அடிமைப் பெண்ணிருந்தாள் அவளுக்கு **விவேகானந்தம்மாள்** என்று பெயர். ஏறக்குறைய ரமணி என்பவளுக்

கொத்த பிராயமுடையவள். தாய் தந்தையில்லாத அநாத பெண். ஐந்து பிராயத்தில் ஆனந்தன் வீட்டு வேலையில் அமர்ந்தாள். இவள் ரமணியோடு வளர்ந்துவந்தவள். செம்மறியாட்டுக்கும் புலிக்கும், சூரியனுக்கும் மின்மினிப் பூச்சிக்கும், பருவதத்துக்கும் மண்ணாங்கட்டிக்கும் எவ்வளவு பேதமோ, அவ்வளவே பேதம் இவ்விரு பெண்களினிலும் வெளியாயிற்று.

விவேகானந்தம்மாள் எப்போதும் காலை $4\frac{1}{2}$ மணிக்கு எழுந்திருப்பாள்; ரமணி என்பவள் காலை $8\frac{1}{2}$ மணிக்கு எழுந்திருப்பாள்; இதையறிந்த முத்தம்மாளென்னும் தன் தாய் அவளுக்கு எப்போதும் விவேகானந்தம்மாளைப்போல் அதிகாலையி லெழுந்திருக்க வேண்டு மென் மகளே என்று போதித்துவருவாள். ஒருநாள் தாய், மகளே, இப்படி $8\frac{1}{2}$ மணிவரைக்கும் படுக்கையிலிருந்து புரண்டு புரண்டு கொடுப்பது பெண்களுக்கு அழகல்ல; உன் வேலைக்காரியை முன்மாதிரியாக்கிக்கொள் என்று புத்திசொன்னபோது, ரமணி புஸ்ஸென்று எழும்பி சர்ப்பம்போல் சீறி, சினந்து என்னம்மா உங்களுக்குத் தான் வாய் இருக்கிறதென்று பேசுகிறீர்களோ? என் இஷ்டம்போல் படுத்துறங்குவேன்; என்னிஷ்டம் போல் படுக்கையிலிருந்து எழுந்திருப்பேன்; இவ்விஷயங்களைப்பற்றி எனக்கு யாராகிலும் போதிப்பது அவசியமில்லை. விவேகானந்தம் அகத்தியமாய் $4\frac{1}{2}$ மணிக்கு எழுந்திருக்கத்தான்வேண்டும். அவள் எப்படியிருந்தாலும் எனக்கு வேலைசெய்யும் அடிமைப்பெண். புழுக்கைச் சிறுக்கி. தக்க சமயத்தி லெழுந்து வேலை செய்யாதிருந்தாளானால் அவள் வயிறு நிறைவதெப்படி? யார் சோறு போடுவார்கள்? யார் வஸ்திரம் கொடுப்பார்கள்? நட என்று துரத்தமாட்டார்களா? என்று கூச்சலிட்டாள். விவேகானந்தம்மாள் அருணோதயத்தி லெழுந்து

காலை போஜனம் தயார்செய்து, பால் கறந்து, பசு கன்றுகளுக்கூழியம்செய்து, செம்புபித்தளைப்பாத்திரங் களையும் காண்டி முதலியவைகளையும் துலக்கி வைத்து விட்டு, அடுப்புக்கரியையும் ஒரு செம்பு வெந்நீரையும் கையிற் பிடித்துக்கொண்டு 8½ மணிவரைக்கும் படுக் கையை விடாத ரமணியை எழுப்பி, அக்கா எழுந்து கொள்ளுங்கள், சூரியபகவான் பிரகாசிக்காலனுன்; பல் தேய்த்துக்கொள்ளுங்கள்; அம்மா கோபித்துக் கொள்ளுகிறார்களென்பாள். அப்போது ரமணி 'என் னடி பிணமே! எனக்கு நீ புத்திசொல்ல வந்தவளோ? இனிமேல் வாய்திறந்தால் உன்னை உதையுதையென் றுதைத்துக் கீழே தள்ளுவேன் தெரியுமா?' என்றுதிட்டி விட்டு மறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கண்ணைமூடிப் படுத்துக்கொள்வாள். விவேகானந்தம்மாள் அவள் திட்டையெல்லாம் பொறுத்துக்கொண்டு நகைமுகத் தோடு, அக்கா, உங்கள் மாமியார்வீட்டில் இவ்வளவு நேரம் படுத்துறங்க விடுவார்களா? தக்க சமயத்தி லெ ழுந்திருக்க இப்போதே பழகுங்கள் என்று மறுபடியும் எழுப்புவாள். கடைசியில் இவளுடைய அலட்டுப் பொறுக்கமாட்டாமல் எழுந்து விவேகானந்தியை வைது முகத்தில் துப்பி அடிப்பாள். அப்போது விவேகானந்தம்மாள், பெரிதல்ல, எப்படியும் எழுந்து விட்டீர்களே, அதுவே போதும். என் முகத்தில் பட்ட உங்கள் உமிழ்நீர், உங்களுக்கு உங்கள் மாமியார் வீட்டில் அகப்படும் பன்னீரைப்போலிருக்கிறது. என்னை நீங்கள் அடித்த அடிகள் உங்களுக்கு உங்கள் தாய் வீட்டிலகப்படும் ஜல்லிகளைப்போன்றது என்று சொல்லிக் கலகலவென்று சிரிப்பாள்.

இவ்விரண்டு பெண்களின் சுபாவத்தில் இன்னு மநேக பேதாபேதங்க ளிருந்தன. ரமணியின் முகத்

தை நோக்கினல் எல்லோரும் இவள் சோம்பேறி, மூதேவி யென்றே சொல்லுவார்கள் விவேகானந்தம்மாள் எப்போதும் மலர்ந்த முகத்தையுடையவள். பார்ப்போர் இவளே சிதேவி என்பார்கள். ரமணி விவேகானந்தம்மாளை எப்போதும் சினந்துகொள்வாள். விவேகானந்தம்மாள் எப்படிப்பட்ட கஷ்டத்தையும் பொறுத்துக்கொள்வாள். கோபிஷ்டியல்ல, ரமணி எப்போதும் சோம்பல்கொண்டு சமயத்தை வீணுக் கழிப்பாள். விவேகானந்தம்மாள் எப்போதும் ஜாக்கிரதை யுள்ளவளாயிருந்து சமயத்தை ஆதாயப் படுத்திக்கொள்வாள். வீட்டெஜமாட்டி வேலையின்றி யுட்கார்ந்திருப்பது தப்பிதமல்லவென்றும், அடிமைப் பெண்கள் எப்போதும் சுறுசுறுப்பாயிருந்து கீழ்ப்படிதலைக் காட்டுவது அவசியமென்றும், வாசிப்போரில் சிலர் யோசிப்பார்கள். ஆனல் இது தப்பிதமான எண்ணம். வேலைக்காரி எவ்வளவுக்குச் சுறுசுறுப்பும் கீழ்ப்படிதலு முள்ளவளாயிருப்பாளோ, அதற்கதிகமாகவே எஜமாட்டியும் இருக்கவேண்டும். அப்படியிராவிட்டால் எஜமாட்டி வேலைக்காரியும் வேலைக்காரி எஜமாட்டியுமாய் மாறிப்போவார்கள்.

ரமணியை மணம்புரிய அனேகர் கேட்டார்கள். அனேக ஸ்திதிவந்தர் அவளைத் தங்கள் குமாரருக்குக் கலியாணம் செய்ய ஆசித்தார்கள். இதற்குக் காரணமென்னவென்ருல், தந்தையின் சகல ஆஸ்திக்கும் அவளே பாத்தியஸ்தாளா யிருந்தாள்; தாய்க்கு ஒரே மகள், மேலும் அதிக லாவண்ய சொரூபி; 'அனேக மரங்களைக் கண்ட தச்சன் ஒரே மரத்தை வெட்டான்' என்னும் கன்னடப் பழமொழிக்கொப்ப, அனேக சம்பந்தங்களில் எதைத் தெரிந்துகொள்ளலாமென்று தெரியாமல் தன் பெற்ருேர் திகைத்து நின்ருர்கள். கடை

சியாக ஒரு வாலிபனைக் கண்ணுற்று அவனைக் குறித்துக்கொண்டார்கள். இவனொரு கோடீஸ்வரனின் மகன். ஆங்கிலேய பாஷை தமிழ் நன்றாய் அப்பியசித்து B. A. பட்டம் பெற்றவன். இவனுக்கு ரமணி மனைவியானாள். விவேகானந்தம்மாளுக்கும் விவாக பருவமாயிற்று. அவள் ஆனந்தனுடைய வீட்டில் நன்றாய் வேலைசெய்ததினாலும் தாய் தந்தையற்ற பெண்ணாயிருந்ததினாலும் ஆனந்தனும் முத்தம்மாளும் அவள் பேரில் கிருபைகூர்ந்து ஏறக்குறைய 70 ரூ. பெறுமான நகைகள் செய்து கொடுத்து, 70 ரூ. பெறுமான ஒரு சிறிய தோட்டமும் ஸ்திரீதனமாகக் கொடுத்து தங்கள் வீட்டுக் கருகே வாசம் செய்துகொண்டிருந்த ஒரு ஏழை வாலிபனுக்கு விவாகம் பண்ணுவித்தார்கள். இவனுக்கு **ராமச்சந்திரன்** என்று பெயர். அட்சர மறியாதவன்; ஒரு காசுச் சொத்துமில்லாத தரித்திரன். ஆனால் சுகதேகியும் சுறுசுறுப்பாய் வேலை செய்யும் சுபாவமுடையவனும் பொறுமை தயாளம் பொருந்தியவனுமா யிருந்தான்.

ரமணி விவாகமான பின்னும் தன் தாய் தந்தைகளின் வீட்டிலேயே நிலைகொண்டாள். அவளுடைய பெற்றோர் அவர்களுக்கு, நீங்களிருவரே எங்களுக்குப் பிள்ளைகள். உங்களுக்கு வேண்டிய திரவியங்கள் எங்கள் வீட்டில் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அப்பா, நீ தலைமருகனாயிருந்து அவைகளைக் கைப்பற்றிக்கொண்டு நம்மோடு வாசம்பண்ணவேண்டுமென்று போதித்தார்கள். அவன் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டான். இப்படியாக ரமணி பெற்றோராலும் தன் பர்த்தாவாலும் ஏறக்குறைய ஒரு லக்ஷரூபாய் ஆஸ்தியுடையவளும், விவேகானந்தம்மாள் ஏறக்குறைய 200 ரூ. ஆஸ்தியுடையவளுமாய்

இருவரும் சமுசார சாகரத்தில் காலிட ஆரம்பித்தார்கள். ஆரம்பித்துச் சிலகாலமான பின்பு ரமணியின் தாய் தந்தைகள் காலவியோகமானார்கள்.

## II-ம் அத்தியாயம்.

தடாகத்துக்குத் தாமரைப் புஷ்பமும், மயிலுக்குச் சுந்தரமான தோகையும், ஆகாயத்திற்குப் பூரண சந்திரனும், மனுஷனுக்கு மனச்சாட்சியும் எவ்வளவு விசேஷமோ, அப்படி யேசுகுணநிறைந்த பெண் வீட்டுக்கு விசேஷமா யிருக்கிறாள். ஆனால் மனைவி அன்பென்னு மலங்கார வாபரண மற்றவளாய்ப்போனால், புல்லுக்கு அக்கினியும், சரீரத்துக்கு க்ஷயமும், பிராணத்துக்கு மரணமும் சத்துருக்களா யிருப்பதுபோல கெட்டகுணமுள்ள பெண் வீட்டுக்கு உபத்திரவமாகிறாள். நாரி பாருக்குபகாரி. ஆனால் கொடூரிமா பெரிய மாரி. இதனுண்மையை ரமணி விவேகானந்தம்மாளென்னும் இவ்விருவரின் பின்வரும் கதையால் அறிந்துகொள்ளலாம்.

ரமணியின் பெற்றோர் இறந்தபின்பு அவளே வீட்டுக்கு எஜமாட்டியானாள். அப்போது அவள் வீட்டிலிருந்த சம்பத்துக்குக் கங்குகரை யில்லாதிருந்தது. வீட்டுச் சாமானங்களுக்கு விலைகட்டியும் முடியாததாயிருந்தது. செம்புப் பாத்திரங்கள், வெள்ளித் தாம்பாளங்கள், பீங்கான்கள், வெள்ளிக்கரண்டிகள் வீட்டின் நானபாகங்களிலும் மின்னிக்கொண்டிருந்தன. அநேக தொம்பைகளில் நெல், எள் முதலிய நவதானியங்கள் நிறைந்திருந்தது. கட்டில், மேசை, நாற்காலி, கப்

போர்டு, பிள்ளைத்தொட்டி, மரப்பெட்டிகள், கடிகாரம், டைம்பீஸ், வாச், கண்ணாடிகள், படங்கள், தந்தப் பெட்டிகள் முதலிய சாமானங்களுக்குக் குறைவில்லை. இதன்றியும் மற்றொரு பெரிய காம்ராவில் பவுண்டு நிறைந்த வெள்ளிப்பெட்டியும், பூஷணாதிகள் நிறைந்த தந்தப்பெட்டியும், ரூபாய்கள் நிறைந்த இரும்புப்பெட்டியும் இருந்தன. முற்றத்தி லொரு குதிரை வண்டியும், அழகான புரூம் வண்டியும், ஒரு கல்வண்டியும் நின்றுகொண்டிருந்தன. சுருக்கிச் சொன்னால் ரமணிக்கு உலக சம்பந்தமான சகல பாக்கியங்களும் குறைவின்றி யிருந்தன. அவளைப் பார்ப்பவர்களெல்லாம் லட்சுமி என்றால் இவளே என்பார்கள்; அவளுடைய வீடென்ன? அவளுடைய பாக்கியமென்ன? அவளுடைய ஆஸ்திபாஸ்தி என்ன? அவளுக்கு வாய்த்த புருஷனின் வித்தையென்ன? அவனுடைய கம்பீரமென்ன? உலகத்தில் ஜென்மமெடுத்தால் இவளைப்போ லெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தாயின் வயிற்றில் உற்பத்தியாகவே கூடாது, அல்லது பிறந்தவுட னிறக்க வேண்டும் என்பார்கள்.

ரமணியின் வெளித்தோற்றம் இவ்வளவு மேன்மையுள்ளதாயிருந்தாலும் அவளுடைய அந்தரங்க நிலைமை மகா குறைவுள்ளதும் அருவருக்கப்படத்தக்கதுமாயிருந்தது. சிறுவயதில் அவளுக்குள்ளிருந்த அக்கினி வரவா அதிகரித்து பலப்பட்டுப்போனது. விடிந்து 9 மணிக்குங்கூட தூக்கத்தைவிட் டெழுந்து வரமாட்டாள்; அவள் புருஷனாகிய தேஜபாலன் அவள் தலைமாட்டில் உட்கார்ந்து, அம்மூதேவி முகத்தைத் தடவிக்கொடுத்து, என் பிரிய ரமணியே, எழுந்திரு, மத்தியான மாகப்போகிறது! என்று சமாதானத்தோடும் அன்போடும் எழுப்புவான். ஆனால் அவளுக்கது

கழுதைக்குப் பின்னுல் கின்னரம் வாசிப்பதுபோலி ருக்கும். அவள் எழும்புவதே யில்லை. பின்பவன், பெண்ணுய்ப் பிறந்தவள் பிணம்போல் படுக்கையிற் கிடப்பாளோ? உதயத்தி லெழுந்து வீட்டுக் காரியங்க ளைப் பார்க்கமாட்டாளோ? வேலைக்காரர் மனங்கொண் டமட்டும் வாரிக்கொண்டு நடக்கட்டும், நீ பிணம் போல் படுத்திரு என்று கோபிப்பான். அவளோ படுக் கையில் கண்ணுருட்டி, என்ன உன்னைச் சனியன் பிடித் தாட்டுதோ? உனக்கு வெறிபிடித்ததோ? வெறியனைப் போல் உளறுகிறுயே. பிச்சைக்காரன் மகளைக் கொண் டுவந்தேனென்று நினைத்தாயோ? நான் மனம்போல் படுக்கக்கூடாதோ? நானுன் வேலைக்காரி யென்று நினைத்தாயோ? நட நட துஷ்டனே; என்முன் னிற்க வேண்டாம் என்று குய்யோ முறையோ வென்று கூச்சலிட்டு, மறுபடியும் கண்மூடிப் படுத்துக்கொள் வாள். பெண் பிசாசானுல் புருஷன் நாயைவிடக் கேவ லம் அல்லவோ? ஐயோ, அவன் வேலைக்காரியோடு காப்பிப்பானங்கேட்டுக் குடித்துவிட்டுத் தன் வேலைக் குப் போய்விடுவான்.

ரமணியின் வீட்டில் விகடதாசன் என்னும் ஒரு வேலைக்காரப் பையன் இருந்தான். அவனுக்கு ஏறக் குறைய 20 வயது. வார்த்தையில் மகா வல்லவன். ரமணி தன் நாயகனை அசட்டைசெய்து வார்த்தை யாடும்போது அப்பையன் 'குடம் நிறையப் பால் கறந்தாலும் உதைக்கும் பசு ஆகாது' என்று மெல்ல சொல்லிப்போடுவான். இதனர்த்த மென்னவென் ருல், வீடு நிறையத்தக்க சம்பத்துக்களைக் கொண்டு வந்தாலும் புருஷனுக் கடங்காத பெண் ஆகாது. 'பெண் ணைக் கொண்டாயோ மண்ணைக் கொண்டாயோ?' என் னும் கேள்வியில் கொஞ்சம் உத்தமார்த்த முண்

டென்று யோசிக்கவேண்டியதுதான். இது ஏழைத் தேஜபாலனுடைய மனைவியில் வெளியாகிறது. சபாசு, உன் பழமொழிக்கு 1,000 வராகன் கொடுக்கவேண்டும். 'கப்பல் பாக்கு மரமல்ல, பெண்சாதி ராணியல்ல' வென்று இன்னொரு வேலையாள் மெல்ல சொல்லிக் கொள்வான்.

ரமணியின் புருஷனாகிய தேஜபாலன் தூக்கத்திலிருந்தவனை எழுப்பினபோது வேலையாட்கள் மனங்கொண்டமட்டும் வாரிக்கொண்டு போகட்டும் என்று சொன்னதில் அநேக அபிப்பிராயங்கள் உண்டு. தன் வீட்டில் அநேகம் பசுக்கள் பால் கொடுத்துக்கொண்டிருக்கும். எஜமாட்டி எவ்வளவு பால் கறந்தீர்களென்று விசாரிக்காத காரணத்தால் வேலையாட்கள் முக்கால்வாசிப் பாலை விற்றுப் பணமாக்கி இடுப்பில் சொருகிக்கொள்ளுவார்கள். தயிர் கடைந்து வெண்ணெய் எடுப்பதும் வேலைக்காரருடைய வேலையாதலால், அவர்கள் தாங்களே கிருஷ்ணபோஜனம் பண்ணிக்கொள்வதல்லாமல், தத்தம் மனைவி மக்களுக்கும் வேண்டிய தயிர் மோர் வெண்ணெய் கொண்டு போவார்கள். சுயம்பாகியின் மக்கள் உபவாசம் பண்ணுவார்களோ? என்றபடி வேலைக்காரி காப்பிக் கொட்டை பழவகைகளல்லாமல் காலைப் போஜனத்துக் கவசியமான சாமக்கிரிகளைத் திருடி, திருடித் தின்ன விதியிருக்கும்போது பிச்சை யெடுப்பானேன் என்று சொல்லி தன் மகள் வசம் வீட்டுக் கனுப்பி வைப்பதல்லாமல், தன் அயலகத்தாருக்கும் எடுத்தெடுத்துக் கொடுப்பாள். தண்ணிக்காரியோவென்றால் எள்ளையோ நெல்லையோ துணி மணிகளையோ கைக் கெட்டினமட்டும் வாரிச் சுருட்டி யடித்துக்கொண்டு,

'தேன் வழித்தவன் புறங்கை நக்குவதே லாபம்' என்று, நகர்ந்துவிடுவாள்.

நமது அம்மாள் காலை 9 மணிக்கு விழித்து கண்களை நிமிட்டிக்கொண்டு வெளியே வரும்போது வேடிக்கைப் பார்க்கவேண்டும். அவள் முகத்தில் முப்பது மூதேவிகள் மொத்து மொத்தென்று கூத்தாடுவது போலிருக்கும். அவளெழுந்து வரும்போது அவளுடைய ஏவலாட்கள் திட்டுவாளென் றஞ்சி ஒளித்துக் கொள்ளுவார்கள். ஆனால் விகடதாசன் அஞ்சாமல் எதிர்முகமாய் நிற்பான். அவனுக்கு அவளுடைய திட்டுகள் தலையில் பால் வார்த்ததுபோலிருக்கும். அவள் திட்டும்போது அவன், அம்மா, உங்களுடைய திட்டுகள் எனக்கு ஈஸ்வரனின் ஆசீர்வாதம்; உங்கள் தூஷணை எனக்குப் பூஷணம். உங்கள் முறைப்பான பார்வை எனக்கு அதிர்ஷ்ட நோட்டம் என்று சொல்லி அவ்ளைப் பார்த்து கலகலவென்று கைதட்டிச் சிரிப்பான்.

நித்திரைவிட் டெழுந்ததுமுதல் மறுபடி நித்திரைக்குப் போகுமட்டும் வேலையாட்களைக் கோபிக்கிறதும், வெருட்டுகிறதும், திட்டுவதும், அடிப்பதுமே ரமணியின் முக்யவேலை; புருஷனை அவனிவன் என்று பேசி விட்டுவிடுபவளாயிருந்தால் அதே அவனுக்குப் பெரிய அதிர்ஷ்டம். அனேகமுறை இவளுடைய வசைச்சொற்களையும் திட்டு மொழிகளையும் கேட்டு 'தனக்குதவாத பெண்சாதி, சண்டைக்காரியான பெண்சாதி, வீட்டுக்காகாத கூரை, ஒழுகும் வீடு, இப்படிப்பட்டவைக ளாகாதப்பா' என்று தன் சிநேகிதரோடு முறையிட்டுக் கண்ணீர் உதிர்ப்பான். ரமணியின் வீட்டில் திருடிப் பிழைக்கலாமென்னும் ஆசையோடு போகும் வேலையாட்கள் அநேகரேதவிர

யோக்கியர் போகார்கள். அவள் வீட்டின் நிலைமையைச் சற்றுப் பார்ப்போம். வீட்டுச் சாமானங்களெல்லாம் விழுந்த இடத்திலேயே வெகுநாளைக்குக் கிடக்கும். பாயும் தலையணையும் இரவு பகல் விரிந்தே கிடக்கும். துணிகளெல்லா மூலைக்குமூலை சிதறிக் கிடக்கும். வஸ்திரங்களி னடியில் ஒருவேளைச் செல்லுப் பிடித்துக்கொண்டதோ என்று தோன்றும். அரிசிப்பெட்டி வாய்திறந்திருக்கும். மசாலைப்பையின் வாயும் ஆவென்று திறந்தவண்ணங் கிடக்கும். எலிகள் தின்றமட்டும் தின்று சிதறியிருக்கும் அரிசியின் மேலேயே படுத்துக் கிடக்கும். வீட்டில் நல்ல நல்ல தீபங்கள் இருந்தாலும் அவைகளைத் தொட்ட உடனே கையில் எண்ணெயும், அதோடு அழுக்கும் தூசியும் பிடித்துக்கொள்வதினால் கைகழுவ ஒரு முழுஸோப்பும் தேவையாயிருக்கும். தேவையானமட்டும் ஊசி, பென்கத்தி, பெரிய மேசைக்கத்தி, கரண்டி, கண்ணாடிகளும் வகை வகையான சீப்புகளிருந்தும், தேடும்போது அவசரத்துக்கு ஒன்றும் அகப்பட்டாது; ஏன்? ரமணி அவைகளைக் கண்ட கண்ட இடத்தில் போட்டுவிடுவதே காரணம். இவைகளைக் கிரமப்படுத்தச் சேவகர்களுக்கும்கூட சொல்லமாட்டாள். இச்சிறிய சாமானங்களைத் தேடும்போது சில வேளைகளில் ரமணிக்கும் தன் நாயகனுக்கும் வேலையாட்களுக்கும் பெருஞ்சண்டை யுண்டாகிவிடும்.

ஒருநாள் ஒரு வெட்டுகத்தி அகப்படவில்லையென்று சண்டை தொடுத்தாள். அப்போது விகடதாசன் வெளியே தன்னோடிருந்த மற்றொரு வேலையாளைப் பார்த்து, வெட்டுகத்தி எங்கேபோ யொளித்துக்கொண்டதப்பா? ஓஹோ, அது நானிங்கே ஒளித்துக்கொண் டிருக்கிறேனென்று சொல்லக்கூடாதா?

அது மாமியாருக்கு பயப்பட்டு வாயை மூடிக்கொண்டிருக்கிறதாக்கும்; வாய்திறந்தால் மாமியார் கோபாவேசங்கொண்டு முறைத்துப்பார்த்து வாய்மேல் அறைந்து விடுவார்கள். உடனே தான் தமயந்தியின் கண்ணுக்கெதிர்ப்பட்ட வேடனைப்போல் பஸ்மமாகிப்போவேனென்று சும்மா விருந்துவிட்டதாக்கும். பார்த்தாயா? அது பெண்ணின் பலமாகிய அக்கினி; இது கூச்சவிடும் நெருப்பு; தெரியுமா? என்று சொல்லி பரியாசித்தான். இதைக்கேட்ட அந்த வேலைக்காரன் சிரிப்பை அடக்கக்கூடாமல் ஹ ஹ ஹ என்று கெட்டியாய்ச் சிரித்துவிட்டான். உடனே ரமணி கடுஞ்சொற்களால் திட்டிக்கொண்டு, கோபித்துப் பற்கடித்து, ஓடி வந்து சமீபத்தில் கொதித்துக்கொண்டிருந்த நீரை மொண்டு இரண்டு வேலையாட்கள்மேலும் ஊற்றி விட்டாள். அப்போது விகடதாசனின் ஜதையாள் ஓடி விட்டான், விகடதாசனோவென்றால், அம்மா! அதோ ஓடுகிறவனுக்கு சரீரம் வளர்ந்துவிட்டது; அவனுடைய சரீரத்தில்பட்ட நீர் அதிகக் குளிரை யுண்டாக்கி விட்டது; நெருப்பு சூட்டை யதிகரிக்கச் செய்தது; அவன் மனுஷன், ஓடிப்போய்விட்டான்; நானோ நீங்கள் தேடிக்கொண்டிருக்கும் வெட்டுகத்தி; 'வெட்டுகத்திக்குக் குளிருமில்லை அனலுமில்லை' என்று பழமொழியு முண்டல்லவா? என்றான். அவன் பேச்சை முடித்தவுடனே யாரோ ஒரு வேலையாள் அம்மா! 'வெட்டுகத்தி யிதோ அகப்பட்டுக்கொண்டது. தண்ணீர்ச் சாலுக்குள் கிடந்தது' என்று கூச்சலிட்டான். உடனே ரமணி உள்ளே ஓடினாள். விகடதாசன், சரிசரி, வெட்டுகத்திக்குக் குளிருமில்லை அனலுமில்லை; ஆகையால் அது தண்ணீர் சாலுக்குள் அமிழ்ந்துபோய், அதற்குக் குளிரதிகமானதால் நமது அம்மன

வரோடு சச்சரவு செய்துகொண்டிருந்தது; நாளைக்கு அடுப்புக்குள் விழுந்து சமர்புரியத் தொடங்குமாக்கும் என்றான். இதன் அர்த்தம் என்னவென்றால் சாமானங்களை ஒழுங்காய் அதனதன் ஸ்தானத்தில் வைத்து பத்திரப்படுத்தாவிட்டால் அவைகள் கண்ட கண்ட இடங்களில் விழுந்து சிதறிப்போகும்; தேடும்போது சுளுவில் அகப்படாது; அப்போது வீட்டுக்கு வரும் நேசர்மேலும், மற்றவர்கள்மேலும் சந்தேகமுண்டாகும் என்பதே.

ரமணியின் புருஷன் வீட்டின் ஒழுங்கீனத்தைப் பொறுக்கமாட்டாமல் அடிக்கடி அவளோடு நொந்து பேசுவான். ஒருநாளவன் தன் மனைவியோடு ரமணீ! நான் என் பெற்றோரின் வீட்டைவிட்டு உன் வீடுவந்து சேர்ந்ததை நினைத்து மகா விசனப்படுகிறேன்; ஓரசன் வேறோருருக்குப்போனால் நாயைவிடக் கேவலமல்லவா? பெண்கள் கெட்டால் தாய்வீட்டில்தான் கெடவேண்டும்; பொன் கெட்டால் தட்டான்வீட்டில்தான் கெடவேண்டும்; பெண்ணைப்பெற்றவர்கள் அவளைச் சன்மார்க்கத்தில் வளர்க்கவேண்டும். ஆனால் உன் குணம் 'பெற்றவனை யறியாதவள் பாட்டனை யறிவாளா' என்பதுபோலிருக்கிறதே; ஐயோ! என் விதிவசமோ? வேண்டுமான சாமானங்களும் நவதானியங்களும் உண்டு; ஆனால் ருசிகரமான போஜனங் கிடைக்கவில்லையே; வேண்டுமான கட்டில் பாய் படுக்கைகளெல்லாமுண்டு, ஆனால் நீ அவைகளின்மேல் வளர்த்து வைத்திருக்கும் மேட்டுப்பூச்சியின் உபத்திரவத்தால் என் இமைகளுக்கு நித்திரையில்லையே; வேண்டிய நகைநட்டுகளெல்லாம் உண்டு, ஆனால் உன் அக்கிரமங்கள் அதிகமாயிற்றே என்பதை நினைக்கும்போது எனக்கு லவலேஷம் சந்தோஷமில்லையே; உறவின்முறையா

ருக்குக் கணக்கில்லை; ஆனுல் உன் மூதேவித்தனத்தை அவர்க ளறிந்திருக்கிறபடியால் நமது வீட்டில் கால் வைக்கிருர்களில்லையே; நான் கற்றவித்தை போது மானதாயிருக்கிறது; ஆனுல் உன்னுல் அதற்கு மரியாதை யில்லாமற்போயிற்றே; நானும் ஒரு மனு ஷனு? என் வாழ்வும் ஒரு வாழ்வா? நான் வாழ்வதை விடச் சாவதே சுளுவாய்த் தோன்றுகிறது. நானுன்னை மணந்தநாள் முதற்கொண்டு இற்றைவரையிலும் உன் னுல் ஒரு சந்தோஷத்தையும் அனுபவித்தேனில்லையே; என்னைப்போன்ற நாலுபேர் யோக்கியர்கள் இந்த வீட்டுக்குள் வந்துவிட்டால் எனக்குப் பெரிய வெட்க மாயிருக்குமே; ஏன்? உன் சோம்பேறித்தனமல்லவா? வீட்டு சாமானங்கள் ஒழுங்கீனமாய் அங்கங்கே சிதறிக் கிடக்கின்றன; சிலந்திப்பூச்சி வலை மூலைகளில் தொங்கி வீட்டின் அந்தங் கெட்டுப்போகிறது; ஐயோ! ரமணீ! உன்னைப்போன்ற குபேரன் மகளை மணம்புரிவதைப் பார்க்கிலும் ஒரு ஏழையின் மகளைக் கைப்பிடித்திருப் பேனுனல் என் வாழ்வு ஒரு வாழ்வாயிருந்திருக்குமே; என் ஜன்மம் சபலமானதா யிருந்திருக்குமே என்றிவ் வாறு புலம்பலுற்ருன். இவ்வார்த்தைகளை விகடதா சன் கேட்கவில்லை; கேட்டிருந்தானுனல் 'கழுதையைக் கலியாணம்பண்ணி உதைக்கு அஞ்சலாமா?' என்னும் பழமொழியைச் சொல்லியிருப்பான். காஞ்சிரங்காய் மரத்தைக் கண்டவன், அழகு பொருந்திய மாமரத்தைக் கண்டால் சந்தோஷப்படுவதுபோலும், தாடகையின் சரித்திரத்தை யோதினவன், தயாமித்திரியான சீதை யின் சரித்திரத்தை யோதும்போது சந்தோஷப்படு வதுபோலும், கழுகைக் கண்டவன், அன்னப்பட்சி யைக் காணும்போது சந்தோஷப்படுவதுபோலும், வீட்டுச் சர்ப்பத்தைப் போன்ற ரமணியென்னும்

மூதேவி சரித்திரத்தை இதுவரையும் வாசித்தவளாகிய உனக்கு, வீட்டுக்குப் பூஷணமாயிருந்த விவேகானந்தம்மாளின் சரித்திரத்தை ஓதும்போது சந்தோஷம் வராமற்போகாதென்று நினைக்கிறேன்.

## III-ம் அத்தியாயம்.

கடந்த அத்தியாயத்தில் வாசித்ததுபோல் ரமணி லட்ச ரூபாய் ஆஸ்திவந்தளாயும், விவேகானந்தம்மாள் 200 ரூபாய் ஆஸ்திவந்தளாயும் இல்வாழ்க்கை யென்னும் சாகரத்துள் இறங்கினார்கள். விவேகானந்தம்மாள் காலை $4\frac{1}{2}$ மணிக்கு எழுந்து, வீட்டின் முற்றத்தையும் அறைகளையும் விளக்கிச் சுத்தமாக்கி, வீட்டுக்கு வேண்டிய ஜலம் முதலானவைகளை ஆயத்தப்படுத்தி, ராமச்சந்திரனென்னும் தன்னருமை நாயகனுக்கு தந்தசுத்தி செய்யப் பொடிசெய்த அடுப்புக்கரியும் வெந்நீரும் கொண்டுவந்து கொடுப்பாள். அவன் முகங்கழுவினபின், காலை போஜனாதிகளைக் கொண்டுவந்து எதிரில் வைப்பாள். அசனம் செய்தபின், ஆனந்தமாய் தன் வேலைக்குப் போவான். அவன் கூலிவேலைக்குப் போய் தினம் $3\frac{1}{2}$ அணா கொண்டுவருவான். விவேகானந்திக்கு ரமணியின் பெற்றோர் ஸ்திரீதனமாக ஒரு பசுமாடு கொடுத்திருந்தார்கள். அவள் தன் புருஷனை வேலைக்கு அனுப்பினபின், அப்பசுவைப் பசுமையான புல்லுள்ள ஸ்தலத்துக்கு ஓட்டிக்கொண்டு போய்க் கட்டிவிட்டு, வீட்டைப் பூட்டி, கூலிக்குப் போய் அரிசி, நெல் குத்தி வீட்டுக்குத் தினம் வேண்டிய அரிசியைக் கூலியாகக் கொண்டுவருவாள். பிறகு

தன் சிறிய தோட்டத்தில் விளையும் மிளகாய், கத்தரிக்காய், வெள்ளரிக்காய் முதலிய செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவாள். பிறகு சமையற் காரியங்களுக்கு வேண்டியவற்றை ஆயத்தமாக்கி, நாயகன் வீட்டுக்கு வந்தபின், நகைமுகத்தோடு கைகால் அலம்ப ஜலம் கொடுத்து சந்தோஷவார்த்தை பேசி, அன்னம் பகிர்ந்து கொடுப்பாள். வேலைசெய்து அலுத்து வீடு வந்து சேர்ந்தவனுக்கு அவள் சிரிப்பாலும் சந்தோஷ மொழிகளாலும் ருசிகர போஜன பதார்த்தங்களாலும் உண்டாகும் ஆனந்தம் அளவற்றதாயிருக்கும்.

இதை ஓதும் சிநேகிதியே, உன் வாசிப்பைக் கொஞ்சம் நிறுத்தி ஆலோசனை செய். ரமணியின் புருஷன் லட்ச ரூபாய் ஆஸ்திவந்தனுயிருந்தும், கல்விமானுயிருந்தும், அவனுக்கு வாய்த்த பெண்சாதி மூதேவியாயிருந்ததினுல் அவனுடைய வாழ்வு சற்றேறக்குறைய நரகத்தைப்போலிருந்தது. ஆனுல் விவேகானந்தம்மாளுடைய புருஷன் மிகவும் எளியவனும், அட்சர மறியாதவனுமாயிருந்தும் அவனுக்குக் கிடைத்த பெண்சாதி சிதேவியா யிருந்ததினுல் அவனுடைய வாழ்வு மோட்ச வாழ்வுபோலிருந்தது. நீ உத்தமியாயும் சுறுசுறுப்பாயு மிருந்தால், உன் புருஷனுக்கும் பெற்றவர்களுக்கும் உறவின்முறையாருக்கும் மோட்சானந்தம்போலிருப்பாய். நீ துன்மார்க்கமுள்ளவளாஞல் உன்னைக் கட்டினவனுக்கு நரகமாயிருப்பாய். அம்மா! நீ நரகமோ? மோட்சமோ? எவ்விதமாயிருக்கிறுய்? ஆலோசித்துக்கொள்.

விவேகானந்தம்மாளுக்குத் தன் உற்சாகத்தாலும் சுறுசுறுப்பாலும் தனபாக்கியம் வர்த்திக்கத்தொடங்கினது. அவள் கூலிக்குக் குத்தும் அரிசியினுலும், தோட்டத்தில் விளைந்த காய்கனிகளாலும், அவள் வளர்த்த

கோழிகளிடும் முட்டைகளாலும், பொரிக்கும் குஞ்சுகளாலும் வீட்டுச்செலவு மீதியாய் நடந்தேறிவந்தது. புருஷன் கொண்டுவரும் துட்டை ஒருபக்கத்தில் சேர்த்துவைப்பாள். அவளுக்குக் கலியாணமான ஒன்றரை வருஷத்துக்குப்பின் அவளுடைய கொழுத்த பசு கன்று ஈன்றது. அதன் பாலை விற்றதினால் காலையில் ஒன்றரை அணுவும் மாலையில் ஒன்றரை அணுவுமாக தினம் 3 அணு சம்பாத்தியமானது. அதுவும் லாபமல்லவா? அவள் சோம்பேறியல்ல, வேலையற்று வீட்டிலிருக்கும் சமயத்தில் நூல்திரிப்பது அவளுக்கு வழக்கம். அதினாலும் மாதம் மாதம் பணம் சேர்ந்தது. இவ்விதமாக அவள் கஷ்டப்பட்டு சாக்கிரதையாய்ப் பணம் சேர்த்ததன்றி, எல்லாராலும் உத்தம மாதென்றும் ஸ்த்ரீ ரத்தினம் என்றும் பெயர் பெற்றாள்.

அவள் லோபியல்ல; தன் வீட்டிலாகிலும் அந்நிய வீடுகளிலாகிலும் எப்படிப்பட்ட கடினவேலை செய்தாலும் அவள் முகம் மலர்ந்த கமல புஷ்பத்தைப்போ விலங்கிக்கொண்டே யிருக்கும். அயலகத்தாரில் சிலர் அவள்மேல் வயிற்றெரிவு கொண்டிருந்தாலும், அவளை எத்தனையாய்த் தூற்றினாலும், எவ்வளவு துக்கப்படுத்தினாலும், அடிபடும் செம்மறியாட்டைப்போல் சாந்தமுடையவளாகவே யிருப்பாள். வியாதிப்படும் வீடுகளில் சுறுசுறுப்பாய்த் தன்னாலானமட்டும் சகல சகாயங்களையும் ஆயாசப்படாமல் செய்துவருவாள். ஏழைகளிடத்தில் தயவாகப் பேசி அவர்களுக்குச் சகாயம் பண்ணுவாள். இவ்விதமாக அவளுக்கு எத்தனைப் பகையாளிகளிருந்தாலும் அத்தனையான சிநேகிதரும் இருந்தார்கள். அவளை தூஷித்ததை அவளால் உப

காரம் பெற்றவர்கள் கேட்டால், 'நாய் குலைத்தால் தேவலோகம் பாழாகுமோ?' என்பார்கள்.

அதிக சுறுசுறுப்பும் அன்பிணைந்த சுபாவமும் ஒன்றுகூடினுல், ஆச்சரியமான காரியங்களை நடப்பிக்குமல்லவா? விவேகானந்தம்மாளின் சுசீலங்கள் தன் குடும்பத்தில் வெகுவான பிரயோஜனத்தை விளைவித்தது. விவாகமான மூன்று வருஷங்களுக்குள் அவள் 200 ரூபாய் ஸேகரஞ்செய்து, கனிவர்க்கங்கள் நிறைந்த விஸ்தாரமான ஒரு பூமியைக் கிரயத்துக்கு வாங்கி, அதில்தானும் தன் புருஷனுமாகக்கஷ்டவேலைசெய்து, அதைத் தெங்கு, மா, பலா முதலிய விருட்சங்களாலும் பூந்தோட்டங்களாலும் நிறைத்து ஆனந்தவனமாக்கினுர்கள். 8 வருஷத்துக்குள் அவைகள் பலன் கொடுக்கத் தொடங்கின. 200 ரூபாய்க்கு வாங்கின அதே பூமிக்கு இப்போ தொருவன் 2,000 ரூ. கொடுத்து, தண்டன் பண்ணினுலும் கொடுக்கமாட்டார்கள். பிறகு அவளுடைய சம்பத்து கணக்கற்றதாயிற்று. அநேக வயல்நிலங்களும் தோட்டங்களுமுள்ளவளானுள். அவளுடைய மாட்டுத்தொழுவம் கொழுத்த பசுக்களால் நிறைந்துவிட்டது. அவள் வீடு விஸ்தாரமானதும் பாலும் தேனும் தங்கும் வீடுமாயிருந்தது. கடைசியாக அவளுக்குப் புத்திர சம்பத்துமுண்டானது

ஒரு வீட்டில் ஏராளமான பணமிருப்பது, அக்கினிமலையின் கீழ் அக்கினி யிருப்பதற்குச் சமம்; ஒரு வீட்டில் பணமும் குணமும் இருப்பது, சித்திரை மாதத்தில் ஆகாயம் நிறைந்திருப்பதற்குச் சமம்; ரமணியினுடைய வீட்டில் தாராளமான பணமிருந்தது நிஜமே. அதனுல் லாபமென்ன? ஆனுல் விவேகானந்தம்மாள் வீட்டில் ஆரம்பத்தில் வெறும் குணமும்

அன்பும் சுறுசுறுப்பும் ஜாக்கிரதையுமாத்திரம் இருந்தது. ஆகையால் அதனால் ஆன பிரயோஜனம் எவ்வளவோ பெரிதாயிருந்தது. கடைசியாக அவள் பணத்தினாலும் குணத்தினாலும் பிரகாசமடைந்தாள். சகஜமாய் அவளுக்கும் அவள் குடும்பத்துக்கும் உறவின்முறையாருக்கும் சகாயமானது எப்படியென்றால், அவள் கூலிக்கு அசிரி குத்துகிறதற்குப் பதிலாகத் தன் வீட்டில் அநேக ஏழைப்பெண்கள் நெல் குத்திப் பிழைத்தார்கள். தன் புருஷன் அந்நியரண்டை போய்க் கூலிவேலை செய்கிறதற்குப் பதிலாக அநேகர் அவனுடைய வீட்டில் கூலிவேலை செய்து பிழைத்தார்கள்; விவேகானந்தம்மாளின் வீடு அவளுக்கும் அவள் புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் பரம பாக்கியமுள்ள வீடாய்க் காணப்பட்டது. அவள் எப்போதும் தன் வீட்டைச் சுத்தமாய் வைத்திருப்பாள். அதில் எட்டுக்கால் பூச்சும், பட்டுப் பூச்சும் வலைகட்ட முயலாது. கட்டில் முதலிய மரச்சாமானங்களில் மேட்டுப் பூச்சியை வளர்த்துவைக்கமாட்டாள். சாமானங்களை அதனதன் ஸ்தானத்தில் ஞாபகத்தோடு வைப்பாள். தேவையானபோது தேடிக்கொண்டிருக்கமாட்டாள். சமையல் காரியங்களை வேலைக்காரி பார்த்தாலும் தானேபோய் அவைகளைக் கவனியாமலிராள். கறி சமைப்பதிலும், ஊறுகாய் போடுவதிலும், பாக சாஸ்திரத்திலும், இதர வேலைகளிலும் வல்லவர்கள் யாரென்று கேள்விப்படுகிறாளோ, அப்படிப்பட்டவர்களை நேசித்து, அவைகளைக் கேட்டுப் படித்துக்கொள்ளுவாள். வீட்டில் நடக்குங் காரியங்களை வெளியே சொல்லாள். அயலகத்தாரின் குறைவுகளைப்பற்றித் தன் வீட்டில் பேசாள். வீட்டில் புருஷன் இல்லாத வேளையில் அவளோடு யாராகிலும் சச்சரவு செய்ய

வந்தால், புருஷன் வந்தவுடன் ஒன்றுக்கு இரண்டாய்ப் பிணைத்து முறையிட்டு அவன் மனதைப் புண்ணுக்கமாட்டாள். அவனுக்குச் சந்தோஷம் வரத் தக்கவைகளையே தவிர துக்கத்தை அல்லது கோபம் வரத்தக்கவைகளைச் சொல்லிக்கொடுக்காள். ஆனது கொண்டு அவன் அநேகமாயிரம் புருஷன்மாரைப் போல கஷ்ட, நஷ்டம், சஞ்சலம், அவதூறு முதலியவைகளுக்கு ஆளாகாமல் எப்போதும் சந்தோஷமும் சமாதானமு முள்ளவனுகவே யிருப்பான்.

விவேகானந்தம்மாளின் வீடு ஊருக்குப் பிரயோஜனத்தை யளிக்கத்தக்க வீடாயிருந்தது. ஊரில் யாருக்காகிலும் மருந்துக்குப் பாலோ அல்லது வெண்ணெயோ தேவையாயிருந்தால், விவேகானந்தம்மாள் வீட்டுக்குப் போனுல் அகத்தியம் கிடைக்கும் என்பார்கள். 10 ரூ. வேண்டுமானுல் அவள் வீட்டுக்குப் போய் கேட்டுப் பெற்றுக்கொள்வார்கள்; ஒரு கூடையோ, ஒரு மண்வெட்டியோ, ஒரு கோடாலியோ, ஒரு கலப்பையோ, தேவையாயிருந்தால் அங்கே போய்ப் பெற்றுக்கொள்வார்கள். ஒரு ஆபத்து சம்பவித்தால் அவளோடு போய் பேசிச் சகாயமடைவார்கள். விவேகானந்தி வீட்டில் அன்னவஸ்திர சகாயம்பெருத ஏழைகள் அவ்வூரிலிருந்ததில்லை.

விவேகானந்தம்மாள் தாழ்ந்த நிலைமையிலிருந்து உயர்ந்த நிலைமையை அடைந்து இவ்வளவு நன்மைகள் நிறைந்தவளாயிருந்தும், அவளில் கொஞ்சமாகிலும் அகங்காரம் இருந்ததில்லை; சுஞ்ஞானமும் சுகுணமு முள்ளவளைக் காணவேண்டுமானுல் அவள் ஒருவளே தக்கவளாயிருந்தாள். ரமணி விவேகானந்தம்மாளின் உயர்ந்த நிலைமையைக் கண்ணுற்று, அவள் மேல் காய்மகாரப்பட்டு, எத்தனையாய் உயர்ந்தாலும்

அல்லது உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ? என்னமாயிருந்தாலும் விவேகானந்தி என் வீட்டில் புழுக்கைவேலை செய்து வளர்ந்த சிறுக்கியல்லவா? என்றிகழ்ந்து பேசுவாள். இவ்வார்த்தைகள் விவேகானந்தம்மாள் செவிக்கேறினவுடனே, ஆம், நான் அவர்கள் வீட்டு வேலைக்காரிதான். நான் அவர்கள் வீட்டில் தின்றதும், கட்டினதும், குணசாலியான ஏழைப் புருஷனுக்கு என்னைச் சேர்த்துவைத்ததுமான அவர்களுடைய தாயடைவான அன்பு என் மனதைவிட்டு என்றைக்கும் நீங்கமாட்டாது என்று பதிலுரைப்பாள். அதன்றியும் நான் இன்னின்னார் வீட்டில் கூலிக்கு நெல் குத்தினேன்; இன்னின்னார் வீட்டில் தண்ணீர்வேலை செய்து ஜீவித்தேன். இன்னின்னார் வீட்டில் பழையசாதம் கெஞ்சியுண்டு பசியாறினேனென்று உண்மையானவைகளையே பேசித் தன்னைத் தாழ்த்திக்கொள்ளுவாள். ஆம், தெய்வம் எங்களை நாலுபேரைப்போல் ஆசீர்வதித்திருக்கிறது. அவருடைய கிருபையே எங்களுக்கு அரும் பாக்கியமாயிருக்கிறது என்று பகவந்தனை ஸ்துதித்து அகலுவாள். அவள் இவ்விதமான வார்த்தைகளை நுடிக்கும்போது அவளுக்கு 30,000 ரூ. ஆஸ்தியிருந்தது.

## IV-ம் அத்தியாயம்.

சற்குணரைப் புகழ்வது உத்தமமே. துற்குணரைப் புகழ்வது நீசத்தனம். வெளிச்சத்தினழகை இருள் காண்பிக்குமாறு, நீசர்களின் நடக்கைகளை உத்தமரின் நடத்தைகளுக்குச் சம்பந்தப்படுத்தும்போது உத்

தமரின் சிரேஷ்ட குணங்கள் தெளிவாய்க் காணப் படுகிறது. நிழலின் உத்தம லட்சணங்களேயும் பிர யோஜனங்களேயும் அறியவேண்டுமானுல் வெய்யிலின் அகோரத்தை அனுபவிக்கவேண்டும்; உத்தமமான வீட்டின் சுகாதிகளே யறியவேண்டுமானுல், துஷ்ட ஸ்திரீயின் நீசத்தனத்தை அறியவேண்டும்; ஆத லால் உத்தமமான விவேகானந்தம்மாளின் சரித்தி ரத்தைமாத்திரம் சொல்லாமல் துஷ்டத்தனமுள்ள ரமணியின் சரித்திரத்தையும் சொல்லப் புகுந்தேன்.

ரமணியின் வீட்டில் வேலைக்காரியாயிருந்த விவே கானந்தம்மாள் நாள் செல்லச் செல்ல ஆஸ்தியிலும் சுசீலங்களிலும் பெருகி, எல்லாருடைய அன்புக்கும் பாத்திரளானுள். ஆனுல் ரமணியென்பவள் விடியற் கால நிழலேப்போல் ஐஸ்வரியத்திலும் குணசீலத்தி லும் குறைந்து அவகீர்த்தியடைந்து வாடி வதங்கிப் போனுள். தாமரைத் தண்டில் புழு விருந்தால் தாம ரை வாடி துவாரங் கண்டு மாயமாய் மறைந்துவிடும்; பட்டுவஸ்திரம் பெட்டிக்குள்ளேயே இருந்தால், செல் லரித்து நாசமாய்ப்போம்; மனதில் வஞ்சனேயுண் டானுல் மனது நீசத்தனத்துக்கும் நிஷ்ரேத்துக்கும் அஸ்திபாரமாகும். அதுபோல ஐசுவரியத்துக்குள் ஆபத்துக்கேதுவான சோம்பேறித்தனமும், கவலேத் தாழ்ச்சியும், அக்கிரமமும் ஆரம்பித்தால், ஐசுவரியம் அழிந்துபோய் அதிருந்த இடத்தில் தரித்திரமும் கஷ்ட நஷ்டமும் வந்து குடிகொள்ளும். இது ரமணியின் சரித்திரத்தால் வெளியாகும்.

பெண் எப்போதும் தூங்குமுகமா யிருந்தால் அவ ளுடைய ஐசுவரியம் விழித்துக்கொண்டிருக்குமா? அதற்கும் தூக்கம் வந்துவிடும். அவள் எப்போதும் தன் பர்த்தாவைக் கஷ்டத்துக்குள்ளாக்கிக்கொண்டிருந்

தால் அவனுக்குச் சந்தோஷ சமாதானமுண்டாகுமா? அவனை துக்கசாகரத்தின் பயங்கரமான அலைகள் மோதி யடித்துக் கொல்லும். அவள் எப்போதும் பாக்கியத்தையும் சமாதானத்தையும் தூரத்தள்ளி, பகையையும் குரோதத்தையும் பின்பற்றினதால், தன் வீட்டில் சுகமும் ஆறுதலும் இருப்பதெப்படி? அதுவும் தனது ஸ்தானத்தில் நிர்ப்பாக்கியத்துக்கு அஸ்திபாரம்போட்டு நித்திரை மயக்கத்திலிருந்தது.

முதலே ரமணியின் உபத்திரவத்தைத் தாங்கக்கூடாமல் தன் புருஷன் அவளையும் அவள் வீட்டையும் விட்டு அடிக்கடி அங்குமிங்கும் போய் அலைந்து தின்று சந்தோஷிக்க ஆரம்பித்தான். இப்படிப்பட்ட தருணங்களில் அவன் தன்னுடைய கேவல ஸ்திதியைப்பற்றித் தன் சிநேகிதருக்கு அறிவிக்கத் தொடங்கினன். ஒருநாள் தன் சிநேகிதரில் ஒருவன் எல்லா பலத்திலும் பெண்களின் பலமே பெரும் பலமென்று சொல்லிப் பின்வரும் கதையை ஆரம்பித்தான்:— அதேதெனனில்,

ஒருகாலத்தில் மரணதூதன் நரரூபமெடுத்து ஒரு பெண்ணை விவாகம் செய்துகொண்டான். இந்தப் பெண்பிள்ளையோவென்றால் பெரிய சூர்ப்பநகியைப் போலிருந்து தன் புருஷனை இரவும் பகலும் தூஷித்துப் பீடித்துக்கொண்டிருந்தாள். அவனிவ ளுபத்திரவம் பொறுக்கமாட்டாமல் யமலோகம் போய்விடுவதே உத்தமமென்று மனதி லாலோசித்துக்கொண்டான். ஆனால் தனக்குப் பிறந்த ஏக குமாரனை தன் துஷ்ட தாய்வசம் விட்டுப்போக மனமில்லாதவனாயிருந்தான். ஆனதுபற்றி அச்சிறிய குமாரன் தக்க வயதுக்கு வருமட்டும் இந்தக் கெட்ட தாயினால்வரும் உபத்திரவங்களை எல்லாம் பொறுமையாய்ச் சகித்துக்

கொண்டே வா அப்பா என்று போதித்துக்கொண் டிருந்தான். இப்படியே காலம் கழிந்துகொண்டு வந்தது. ஒருநாள் அவன் தன் குமாரனை அந்தரங்க மாய் அழைத்துக்கொண்டு கூப்பிடுதூரம் போய் பயப் படவேண்டாமென்று அபயவாக்குரைத்து, 'நிர்ப்பாக்கி யனான உன் தகப்பன் ஆகிய நான், மரண தூதனுக்கும்' என்று சொன்னான். பையன் இதைக்கேட்டு பயத்தி னால் நடுங்கிப் பின்வாங்கினான். உடனே அவனு டைய தந்தை தன் மகனை அணைத்துக்கொண்டு அவனைப் பார்த்து துக்கித்து, 'மகனே, நானிருபது வருஷகாலமாய் நரரூபந் தரித்துக்கொண்டு, உன் தாயோடு சமுசாரம் பண்ணிவந்தேன். ஆனால் இனி மேல் உன் தாயின் கொடூரங்களை நான் பொறுக் கேன்; இதை உனக்குத் தெரிவித்து, நாமிருவரும் ஓடிப்போக வேண்டுமென்றிருந்தேன்' என்றான்.

பையன் இதைக்கேட்டு அதிகமாய்ப் பயப்பட்ட தைத் தகப்பன் கவனித்து, 'மகனே, நானிப்போது உன் பிராணனை வாங்கவேண்டுமென் றிச்சிப்பதில்லை; நீ சுகமாய் வாழுவதையே விரும்புகிறேன்; ஆனால் நீ மரணத்துக்குப் பயப்படும் அடிமையாயிருக்கிறா யென் றறிந்தே அதிலிருந் துன்னை விடுதலைசெய்யுங் கருத் தாய் என் ரகஸியத்தை உனக்கு வெளிப்படுத்தினேன். இப்பவும் உன் ஜீவனார்த்தத்துக்கு ஒரு உபாயம் சொல்லித்தருவேன்; நீ வைத்தியனாகவேண்டும்; ஆ னால் அதற்காக வேண்டி நீ மருந்து முதலியவைக ளின் பிரயோகத்தைக் கற்று அப்பியாசம்பண்ண அகத்தியமில்லை; நீ ஒரு வியாதியஸ்தனின் அறையில் பிரவேசிக்கும்போது கிழக்குப்பக்கத்தில் அவன் தலை மாட்டில் நான் நின்றுகொண்டிருக்கிறேனோ என்று நுட்பமாய்க் கவனி; நானுன் கண்களுக்குமாத்திரம்

தோன்றுவேன்; அங்கே நானிருப்பேனுகில், நோயாளி குணப்படுவது கூடாதகாரியம். நீ அவனுக்கு மருந்து கொடுக்கவேண்டாம். அவன் செத்துப்போவான் என்று அவனுடைய வீட்டாருக்குத் தெளிவாய்த் தெரிவித்துவிட்டுப் போய்விடு. நான் நோயாளியானவனண்டை காணப்படாவிட்டால் அவன் அகத்தியம் குணமாவான், இது உண்மை. நீ எந்த மூலிகையையாகிலும் கொடு; கொடுத்தவுடனே அவன் வாசியாவான்' என்று சொன்னுன். பிறகு மரணதூதனுகிய தன் தந்தையும் மகனும் ஒருவரையொருவர் முத்தமிட்டார்கள். மரணதூதன் மறைந்துபோனுன். பிறகு பையன் அவைகளெல்லாவற்றையும் ஆலோசித்து வைத்தியத்தொழிலுக்கு ஆயத்தமானுன். இவன் மருந்து கொடுத்த விடத்திலெல்லாம் குணமாய்விட்டது. இவ்விதமாக அவன் பிரஸ்தாபம் எட்டுத்திக்கிலும் பிரபல்யமாயிற்று. ஜீவரட்சகன் என்னும் பெயருண்டாயிற்று; ஏகதேசம் 6 வருஷ காலமாய் நோயாளிகளின் தலைமாடுகளில் தன் தந்தை நின்றிருப்பதை மகன் கண்டாலும் இருவருக்கும் பேச்சு வார்த்தைகள்மட்டும் கிடையாது.

ஒருநாள் அவ்வூரின் அரசனுக்குக் கடினமான வியாதியுண்டாயிற்று. ஊரிலிருந்த பெரும் பெரும் வைத்தியர்களெல்லாம் சிகிச்சைசெய்தும் அவன் வாசியாவதசாத்தியமென்று கை விட்டுவிட்டார்கள். கடைசியாக இப்புது வைத்தியன், பாலியனுயிருந்தாலும் அவனுடைய கைக் குணம் நல்லதென்று கேள்விப்பட்டு, அவனை அழைத்தார்கள். அவன் வந்தவுடன் ராணி அவனைப் பார்த்து, நீ அரசனை வாசியாக்கிவிடுவாயானுல் உனக்கு வேண்டியமட்டும் பரிசளிப்

பேனென்று உறுதிவாக்குக் கொடுத்தாள். அப்போ தவன் ஆகட்டுமென் றெப்பி அரசனிருக்கும் அறைக் குள் பிரவேசித்தான். சுற்றுமுற்றும் பார்த்தான்; அரசனுடைய தலைமாட்டில் தன் தந்தையாகிய மரண தூதன் நின்றிருப்பதைக் கண்டான். அப்போதவன் அரசனுக்கு குணமாகாது; எனக்கு வரும் பாக்கியத் தில் என் தந்தை மண்ணைப் போட்டானேயென்று துக்கமுற்றுக்கொஞ்சநேரமௌனமாயிருந்து ஒரு தந்தி ரமெடுத்திவனை ஓட்டவேண்டுமென் றுலோசித்து, தந்தையைப் பார்த்து தந்தையே! தந்தையே! அதோ என் தாய் வருகிறுள் என்று கூச்சலிட்டான். அக் கூச்சலை மரணதூதன் கேட்டமாத்திரத்தில், மாரி என்னை விடுகிறுளில்லையே என்று சொல்லி தலை தெறிக்க ஓட்டம்பிடித்தான். பெண்சாதி தனக்கு முன் கொடுத்த இம்சைகளையெல்லாம் நினைத்துக் கொண்டு ஓட்டம்பிடித்தான். உடனே சிறு வைத்தி யன் கொஞ்சம் ஜலம் வருவித்து அதில் ஏதோ ஒரு பொடியைத் தூவி அரசனுக்குக் கொடுத்தான். அன்று தொட்டு அரசன் குணப்பட்டுத் தேறினுன். பிறகு அப்பையனுக்கு வேண்டிய பரிசுகளெல்லாம் அளிக் கப்பட்டன.

ஆகையால் ஸ்திரீகளின் பலத்துக்கு மரணதூத னும் பயப்படுகிறுனே. கெட்ட ஸ்திரீகளின் சிநே கத்தைவிட மரணமே தெரிந்துகொள்ளப்படத்தக் கது. சிநேகிதனே, 'நீ உன் கெட்ட மனைவியின் சாவகாசத்தை விட்டு கொஞ்சகாலம் உன் தகப்பன் வீட்டில் வாசம்பண்ணு' என்று தேஜபாலனுக்குப் புத்தி சொன்னுன்.

## V–ம் அத்தியாயம்.

இப்படிச் சொன்ன சிநேகிதனின் வார்த்தையைக் கேட்ட ரமணியின் புருஷனாகிய தேஜபாலன் தனக்குக் கொஞ்சகாலத்துக்காகிலும் சமாதான முண்டாகவேண்டுமென்று மனதிலுன்னி, தகப்பன் வீட்டுக்குப் போய் தன் மனதின்படி உண்டு நித்திரைசெய்து ஆறுதலடைந்தான். தன் அயலகத்தாரோடு கூடிக் குலாவி சந்தோஷப்பட்டு சர்வ துக்கங்களையும் பரிகரித்துக்கொண்டான். அடிக்கடி தன் பெண்சாதியினுடைய வீட்டுக்குப் போய் அவளால் அவமானமுமடைந்து அவள் வீட்டுக்குப் போனதே தப்பிதம் என்று நினைத்துக்கொண்டு பின் திரும்பி வருவான். இவ்விதமாக வெகுகாலம் அவன் பெண்வீட்டை வெறுத்து அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்ததினால் தோட்டங்களிலிருந்த தேங்காய்களையும் வெவ்வேறு கனிகளையும் அந்நியர் வந்தடித்துக்கொண்டு போய் விட்டார்கள். வயல்களிலும் தோட்டங்களிலும் விளைந்துகிடக்கும் தானியங்களை பயமற்றோராய் வந்ததே லாபமென்றும், காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டுமென்றும் நினைத்து கொய்து கொண்டு போய்விட்டார்கள். இன்னும் அநேகர் கொஞ்சங் கொஞ்சமாய் அவளுடைய நிலத்தை தம் மதோடு சேர்த்துக்கொண்டார்கள். இதன்றியும் அறுப்புக்காலத்தில் பயிர் கிடைக்காது; மாடு கன்றுகளைப் பராமரிக்க ஆளில்லாததினால் மெலிந்துபோயின; ஆகையால் ரமணியினுடைய வீட்டின் நிலைமை 100,000 ஆடுமாடுகளிருந்தும் வீட்டில் துளிப்பாலில்லை

என்னும் பழமொழிபோலும், 1,000 தெங்கிருந்தும் பல்குத்த ஈர்க்கில்லை என்பதுபோலு மாயிற்று.

அவளுக்கு 4 பிள்ளைக ளிருந்தார்கள். அவள் வீட்டின் தொம்பைகளெல்லாம் கூழில்லாத வயிறுபோல ஒட்டிப்போயின. கடைசியாக அவள் தன் நகை நட்டுகளையெல்லாம் அடமானம் வைத்து ஜீவனம் செய்ய வாரம்பித்தாள். ஒரு நகையை ஒருத்தியிடம் கொடுத்து 50 ரூபாய்க்கு அடகு வைக்கச் சொன்னாள்; அவள் 70 ரூபாய்க்கு அடகு வைத்து 20 ரூபாயைத் தான் எடுத்துக்கொண்டு 50 ரூபாயை அவளுக்குக் கொடுத்தாள். ஒருவனிடத்தில் ஒரு நகையைக் கொடுத்து 100 ரூபாய்க்கு விற்கச் சொன்னாள்; அவன் அதைக் கொண்டுபோய்ச் சிலநாள்வரையிலும் தன்னிடமாய் வைத்திருந்து மறுபடி அதைக் கொண்டு வந்து, அம்மா, இந்த நகை 100 ரூபாய் பெறுதாம், யாராகிலும் ஏமாந்துபோய் 100 ரூபாய்க் கொடுப்பார்களாம்; உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கபடமாய்க் கேட்டான். அவள் அப்படியானல் உங்களிஷ்டப்படி ஆகட்டும், என்னசெய்யலாம்? என்றாள். உடனே அவன் அதைக் கொண்டுபோய் தன் பெண் சாதிக்குக் கொடுத்துவிட்டு தன்னிடமிருந்த 50 ரூபாயைக் கொண்டுவந்து ரமணியிடம் கொடுத்து நகையை வாங்கிக்கொண்டவனிடம் தற்காலம் இவ்வளவு தானிருக்கிறதாம்; பாக்கியை இரண்டு தினங்களான பின் கொடுக்கிறே னென்றான் என்று சொன்னான். ஆனல் இந்த நீசன் அநேக கெடுவுகள் வைத்து கடைசியாக 10 ரூபாயைக் கொண்டுவந்து கொடுத்து இவ்வளவுதான் கொடுக்கக்கூடு மென்றான். ஐயோ! அந்த நகைக்கு யாரும் கண்மூடிக்கொண்டு 200 ரூபாய் கொடுத்திருப்பார்கள். ஒரு காசுக்கும் வழியில்

லாத ஒருவனிடம் 500 ரூபாய் கிரயமுள்ள ஒரு முத்து மாலையைக் கொடுத்து அடகு வைக்கச்சொன்னாள். அவன்வந்ததை விடக்கூடாதென்று மனதிலெண்ணிக் கொண்டு இலங்கைத் தீவுக்கு ஓட்டம்பிடித்தான். அவளுடைய நகை நட்டுகள் எவ்விதமா யழிந்துபோயின என்பதற்கு மேற்கண்ட சம்பவங்களே திருஷ்டாந்தங்களாயிருக்கின்றன.

ஆபாரணாதிக ளழிந்தபின் வீட்டுச் சாமானங்களைச் சுளுவில் விற்கத் தலைப்பட்டாள். செம்பு பித்தளைப் பாத்திரங்களை ஒன்றின்பின் ஒன்றாய் அடகுவைத்தாள். இவ்விதமாக ஆஸ்தியையெல்லாம் அடகுவைக்காமல்விற்றுவிட்டிருந்தாளானால்நலமாயிருந்திருக்கும். ஏனென்றால், அவள் அடகுவைத்த நகைகளும் சாமானங்களும் ஒன்று பாதிக்கே கொண்டுபோய்விட்டார்கள். ஒருநாள் தன் வீட்டிலிருந்த இரண்டு தொம்பைகளுக்கு 60 ரூபாய் விலை கட்டினாள். அதை கவனித்த விகடதாசன், பிள்ளையில்லாத மலடிக்கு தொட்டில் ஏன்? என்று சொல்லி பரியாசம்பண்ணினான். தானியமில்லாதவளுக்குத் தொம்பை என்னத்திற்கு என்பதே அதின் அபிப்பிராயம். பிறகு வீட்டிலிருந்த மேசை கட்டில் பெட்டி முதலியவைகளையும் விற்றுக் காலங்கழித்தாள்.

அவளுடைய ஆஸ்தியெல்லாம் இவ்வித மழிந்தாலும், அவளுடைய நீசகுணம் அழிந்துபோகாமல் இருந்தபடியே இருந்தது. தரித்திரம் வீட்டில் நிலையாகவே இருந்தது. இப்போதாகிலும் அருணோதயத்திலெழுந்து, வீட்டுவேலை செய்து, சாமானங்களை ஜாக்கிரதையாய்க் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணம்கனவிலும் கிடையாது. முன்போலவே தூங்குமுகம்; முன்போலவே கோபம்; முன்போலவே அக்கிரமம்;

எத்தனைதரம் புடமிட்டாலும் இரும்பு பொன்னுகாது. எவ்வளவு ஆபத்துகள் நேரிட்டாலும் இவள் குணம் பதிலாகவே இல்லை. முதலிருந்த அவளுடைய ஐசுவரியத்தையும் சௌபாக்கியங்களையும் நினைத்தே அவள் திட்டினுலும் ஜனங்கள் பொறுத்துக்கொள்வார்கள். தரித்திரம் வந்து புருஷனைத் துரத்திவிட்ட போதிலும் அவளுடைய கோபவார்த்தைகளுக்கு ஜனங்கள் கீழமைவார்கள். பணக்கொழுப்புப் பிடித்தவனுக்குத் திருப்பதி யாத்திரை, தேகக்கொழுப்பேறினவனுக்குச் சண்டை யென்பதுபோல், தான் மெலிவானுலும் முன்பின் யோசிக்காமலே பேசுவாள்.

தன் ஊழியக்காரரும் அவளை அசட்டை செய்ய ஆரம்பித்தார்கள். அவள் ஒரு வார்த்தை சொல்லித் திட்டினுல் அவர்கள் இரண்டு வார்த்தைகள் சொல்லித் திட்டுவார்கள். அவளுடைய வீட்டில் தண்ணீர் வேலை செய்தவளை ரமணி ஒருநாள் வைதுவிட, அவள் அவளை மானபங்க முண்டாகப் பேசிவிட்டாள். இப்படி வாய்ச்சொல் வாயிலிருக்கும் போதே ரமணி தன் மனதில் எரிச்சல்மூண்டு தண்ணீர் வேலைக்காரியின் தவடையில் இரண்டறை கொடுக்க இரண்டு பற்கள் உதிர்ந்தன. உடனே அவள் பிரியாது செய்துவிட்டாள். ஐயோ! ரமணியின் ஜீவனுக்கு வந்துவிட்டது. அப்போது அவ்வூராரில் சில உபாயங் கற்றவர்கள் அவளண்டை போய் பலதையும் பேசி இன்னு மதிகமதிகமான செலவு வைத்துவிட்டார்கள். நகைகளையும்வீட்டுச்சாமானங்களையும் முன்னமே அடகுவைத்துத் தின்ருளே! இப்போது பல் வியாஜ்யத்துக்காக என்ன செய்வாள்? அவளுக்குப் பணமில்லையோ? இல்லை யென்று சொல்லக்கூடாது. பொன் வெள்ளியில்லாவிடினும் தோட்டம் பூமி வயற்காடுகளெல்லா

மிருந்தன. அவைகளில் சிலதை விற்று வழக்காடினாள். பூமியை விற்றாள். எப்படியோ அவள் அவஸரம் ஜனங்களுக்குத் தெரியவந்ததினால் ஆறு காசு பொருளை மூன்று காசுக்குக் கேட்டார்கள்; விற்றுப்போட்டாள். சிலர் சமாதானம் பண்ணுவோமென்று சொல்லிப் பணம்பெற்று அனாவாசி தாங்களே அனுபவித்தார்கள்; சிநேகிதரோவென்றால் கோர்ட்டில் ஒரு ரூபாய் செலவானால் 10ரூபாய் என்று கணக்குச் சொல்லுவார்கள். பாவியின் திரவியம் பரருக்குப் பங்காய் விட்டது.

அடிபட்டுப் பல்லை உதிர்த்துக்கொண்டவள் ஏழையாயிருந்தும், ஊராரில் சிலர் அவளை உசாவி கோர்ட்டிலும் சகாயம் செய்ததினால் வழக்குப் பலமாய்விட்டது. ரமணி தன் கஷ்டத்தாலும், அலைந்து திரிவதாலும், கோர்ட்டுக்குப் போய்க் காப்பதாலும், மானபங்கத்தினாலும் பொறுக்கமாட்டாமல் மனம் புண்ணாகி, ஐயோ, இன்னும் என்னசெய்வேன்? குபேரனுக்குப் பெண்ணாய்ப் பிறந்த எனக்கு, தேனும் தினைமாவும் தின்று பிழைத்த எனக்கு, ராணியைப்போல் ஆண்டுவந்த எனக்கு இந்த விதியாயிற்றே. வீட்டை விட்டு வெளியேறாத நான் கோர்ட்டுக்குப் போய் ஒருநாளெல்லாம் நாய்போலக் காக்கவேண்டி வந்ததே! எல்லாரும் அம்மா அம்மா என்று கூப்பிடப்பட்டவளான என்னை, போடி வாடி என்கிறார்களே! பையில் பணமில்லாமற்போனதே, கையில் பலமில்லாமல் போனதே, தேகசுகம் குன்றிவிட்டதே, என் பிள்ளைகள் தெருத்தெருவாய் அலையக் காலம் வந்ததே. என் புருஷன் பிசாசைப்போல் வீடு வீடாய் அலைகிறானே, ருசிகரமான போஜனத்தையும் நல்ல நல்ல உடுப்புகளையும் பொன்னாபரணங்களையும் இழந்தேனே, நல்ல

நல்ல சகாயனைப் பகைத்துக்கொண்டேனே, வாழ் விருக்கும்போது எல்லாரும் என் வீட்டில் வயிறு கிழிய தின்றார்கள்; இப்போது என்னைக் கடைக்கண் ணாலும் பார்க்கிறார்களில்லையே; இதெல்லாம் கலி யுகத்தின் மகிமையோ? என்னைத் தூக்கத்திலிருந் தெழுப்ப எத்தனை பேர். ஐயோ, இவ்வித சிரேஷ்ட பதவியிலிருந்த எனக்கோ இவ்விதி லபிக்கவேண்டும் என்று புலம்பினாள். ஜனங்கள் அவனை வெவ்வேறு வார்த்தைகளால் காபராபடுத்துவார்கள்; சிலர் இவ் வழக்கில் உனக்கு ஜேலாகும் என்பார்கள்; சிலர் பல்லுக்குப் பல் வாங்கப்படுவாய் என்பார்கள். சிலர் 200 ரூபாய் அபராதம் விழும் என்பார்கள். இவ்வித வார்த்தைகளைக் கேட்ட ரமணிக்கு மரத்திலிருந்து விழுந்தவனை ஈட்டியால் குத்தினதுபோலிருந்தது.

## VI–ம் அத்தியாயம்.

தலைப்பிள்ளையின் நடக்கை வீட்டாருக்கெல்லாம் மாதிரி, தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சீலை என்னும் பழமொழிகள் சிலவிஷயங்களில் ஒத்துவரா விட்டாலும் அநேக விஷயங்களில் சரியாயிருக்கிற தைக் காணலாம். ரமணியின் விஷயத்தில் அது முழுமையும் சரியாயிருக்கிறதல்லவா? அவளுடைய மக்கள் அவளைவிடத் துஷ்டராயிருந்தார்கள்.

அவளுடைய பிரதம குமாரனுக்கு **பிரபாகரன்** என்று பெயர். அவனுடைய நடக்கை கிருஷ்ண தேவருடையதைவிட அவலட்சணம். அவனுடைய தாய் அவனுடைய தந்தைக்கு எவ்வளவு கசப்பானவ

ளாயிருந்தாளோ அதைவிட அதிகமாய் அவன் தன் அன்னைக்குக் கசப்பானவனு யிருந்தான். அவன் அவளை ஈனப்படுத்திப் பேச ஆரம்பித்தால் அவர்களி டையில் ஒருவரும் நிற்கமாட்டார்கள். தன் தாயைச் செந்நீர் வடியுமட்டும் நொறுக்குவான். அவள் கத்தி யைத் தூக்கினுல் அவன் கோடரியைத் தூக்குவான். பீங்கான் கடைக்காரரும் குடவரும் அவனைப் பார்த்த வுடன் இப்படிப்பட்ட பையன்கள் நாலுபேர் ஊரி லிருந்தால் நம்மைப்போன்ற வியாபாரிகள் குபேர ராய்ப் போகலாம் என்பார்கள். பாய் பாட்டைகளை யெல்லாம் கத்தியினுல்கீறி அவைகளைப் பொத்தலாக்கி வைப்பான். மேசை நாற்காலிகளைக் கத்தியால் கொத் திவைப்பான். மாமரத்தின் மேலேறிப் பழத்தை மாத்திரம் தின்றிறங்கான். அதிலுள்ள காய், பூ, பிஞ்சு முதலியவற்றையும் உதிர்த்துப்போடுவான். பள்ளிக் கூடத்தில் உபாத்தியாயருக்கு எப்போதும் தொந்த ரைக் கொடுப்பான். அவனுடைய பெற்ருேர் மகரா ஜராயிருக்கும்போது உபாத்தியாயர் அவனைச் சிட்சிக் கமாட்டார். இப்போதோ பணம் குறையக் குறைய மனம்போல அடிக்கத் தலைப்பட்டார். ஆனுல் அவன் படிப்பை வெறுத்துச் சிட்டுக்குருவிகளைப் பிடித்து பிடிப்பவனுனுன்.

ரமணியின் இரண்டாம் பிள்ளை பெண்ணுயிருந் தாள். அவளும் அத்தனை நல்லவளல்ல. பார்ப்பவர் களையெல்லாம் ஏளனம்பண்ணிச் சிரிப்பாள் தன் தாயைப் பெயர்சொல்லி யழைப்பாள். வந்திருக் கும் பந்து ஜனத்துக்குக் கொடுக்கப்படும் தாம் பூலத்தைப் பிடுங்கித் தானே மென்றுவிடுவாள்; தாய் அதட்டினுல் தாயின் முகத்தின்மேல் துப்புவாள். வெ ளியே விளையாடப் போனுல் உதைப்பட்டேவருவாள்.

அவளுக்கு மூத்நம்மாள் என்று பெயர். அவளுடைய தமயனுக்கும் அவளுக்கும் வீட்டில் எப்போதும் போ ராட்டம். அடிதடிகளுக்குக் குறைவில்லை. கீழ்ப் படியாத பிள்ளைகளிருக்கும் வீடு பிசாசுகள் வாழும் சுடுகாட்டுக்குச் சமானமாயிருக்கும்.

மூன்றும் நான்காம் பிள்ளைகளும் பெண்களாய்ப் பிறந்தார்கள். மூன்றும் பெண்ணை யொருதரம் ரமணி கோபித்துக் கொண்டதற்குக் கரத்திலிருந்த குழந்தையைத் திடீரென்று கீழே போட்டுக் காலை ஒடித்துவிட்டாள். அவளும் பெருங் கோபிஷ்டியா யிருந்தாள்.

ரமணி இந்தப் பிள்ளைகளையும் தக்கபடி வளர்க்க வில்லை. அப்பிள்ளைகளின் தேகத்தில் எப்போதும் அழுக்கு வஸ்திரங்களே இருக்கும். எல்லாப் பிள்ளை களுக்கும் சிரங்குப் பிடித்திருக்கும். தலைநிறையப் பேனுக்குக் குறைவிராது. மக்களைத் திருத்தி நல்வ ளர்ப்பில் வளர்க்கவேண்டுமென்று ஒருநாள் தன் புரு ஷன் அடித்ததற்கு ரமணி, அவர்கள் உன் மக்களல்ல, என் மக்களென்று அதட்டிப் பிள்ளைகள் முகதாவில் புருஷனைத் திட்டினுள். அன்றுதொட்டு அப்பிள் ளைகளுக்குத் தந்தை யென்னும் மதிப்பே அற்றுப் போயிற்று. ரமணியின்மேல் பிரியாது செய்யப்பட் டிருக்கும்போது முதல் மகனுக்கு 16 வருஷப் பிரா யம்; இரண்டாம் குமாரத்திக்கு 12 வருஷப் பிராயம்; மூன்றும் குமாரத்திக்கு 8 வருஷப் பிராயம்; நான் காம் குமாரத்திக்கு 2 வருஷப் பிராயம்.

அவள்மேல் வழக்குத் தொடுத்திருக்கும்போது ஒரு நாள் இன்றைக்குத் தீர்ப்புக்கொடுப்பார்களென்று யா ரோ ஒருவன் சொல்லிப்போட்டான். அன்றைக்கு அவளுக்குண்டான பயத்தை யார் விவரிக்கக்கூடும்?

ஒருகால் எப்படித் தீருமோ? என்பாள். ஒருகால் சிறையில் வைத்தால் செத்துப்போவேனே என்பாள். ஒருகால் தெய்வம் தப்பவைக்காரோ? என்பாள்.

அவள் நடுநடுங்கி கச்சேரிக்குப் போகும்போது, தூரத்தில் ஒரு குடை தோன்றிற்று. குடை பிடித்தவன் மேன்மையானவனு யிருந்தான். அவள் அவனைக் கண்டவுடன், இவன் என்னைப் பிடிக்கவரும் சர்க்கார் மனுஷனே? என்று பயந்து நடுங்கினுள். ஆனல் அவன் சமீபிக்கச் சமீபிக்க அவளுடைய இருதயம் ஆறுதலடைந்தது. அவன் யார் தெரியுமா? தன் புருஷனே. புருஷனைப் பகைக்கும் பெண்சாதியும், பெண்சாதியைப் பகைக்கும் புருஷனும் தத்தம் விசேஷத்தை ஆபத்துக்காலத்தில் தெரிந்துகொள்வார்கள். ரமணி விவாகதினத்தில் தன் புருஷனைச் சிநேகித்ததைப்போல் மறுபடியும் நேசித்த காலம் இவ்வழக்குக் காலமே என்கலாம்.

அவள் அவனுக்கு நிருபம் எழுதியிருந்தாள். அவன் வருவானே என்னவோ என்னும் சந்தேகத்தி லழுந்தியிருந்தாள். அவனைப் பார்த்து மிகச் சந்தோஷமுடையவளானுள். அவன் சாட்சிக்காரருக்கும் வக்கீல்களுக்கும் இன்னும் மற்றவர்களுக்கும் அதிகமான பணங்கொடுத்து வழக்கைத் தலைகீழாகப் புரட்டிவிட்டதனல் மாஜிஸ்டிரேட்டாருக்குத் தக்க ருசு அகப்படவில்லை. ஆனதுபற்றி அவர், வாதி கொண்டுவந்த பிரியாதுக்கு தக்க ருசு அகப்படாததினுல் வழக்கைத் தள்ளிப்போட்டேனென்று தீர்ப்புச் சொல்லிப்போட்டார். ரமணியின் புருஷனுகிய தேஜபாலன் வழக்கில் ஜயங்கொண்டாலும் அதற்காக அவன் செலவழித்த பணம் அதிக வேதனையை உண்டாக்கும் பணமாயிருந்தது; எப்படியென்றுல் அவன் தன் மனைவியின் தோட்டங்

களில் ஒன்றை விற்றுப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாமென்று பிரயத்தனித்தான். ஆனால் வாங்கத்தக்க மனுஷர் அகப்படுவது கஷ்டமாயிருந்தது. ஆகையால் அவளுடைய வீட்டை அவள் முகாந்தரமாகவே யீடு எழுதி 800 ரூபாய் பெற்றுக்கொண்டான்.

## VII-ம் அத்தியாயம்.

சுகுணமும், சொந்தப் பிரயத்தினமும் வேலைக்காரிகளையும் யஜமாட்டியாய் மாற்றிவிடுமல்லவா? துர்க்குணமும் சோம்பலும் யஜமாட்டிகளையும் வேலைக்காரிகளாகமாற்றிவிடுமல்லவா? இவ்வையகத்தில் ஒரு விதமான மோட்சத்தையும் நரகத்தையும் கவனித்திருக்கிறேன். அவைகள் உலகத்தில் எங்கே யிருக்கிறதென்றால் குணசாலிகளான பெண்டுகளிருக்கும் வீட்டில் மோட்சமும், துர்க்குணமுள்ள பெண்டுகளிருக்கும் வீட்டில் நரகமும் இருக்கிறதென்று சொல்லலாம். ஜாக்கிரதை, சந்தோஷம், தாழ்மை, தயவு, சுத்தம், அன்பு, சமாதானம் முதலிய சுகுணம் நிறைந்த பெண்கள் எந்தவீட்டில் இருக்கிறார்களோ அவ்வீடுகளில் பாக்கியம் நிலைத்திருக்கும் என்பதற்குக் கொஞ்சமென்கிலும் சந்தேகமில்லை.

விவேகானந்தம்மாள் இவைமுதலான நற்குணங்களால் நிறைந்திருந்தாள்; அதனால் அவளுடைய வீடு ஆலமரத்தைப்போல வேரூன்றி வளர்ந்து சந்தோஷம், சமாதானம், அன்பு முதலியவற்றால் நிறைந்தது. வரவர அவள் இக்குணங்களை விருத்திபண்ணிக் கொண்டதால் ஏராளமான வயல் நிலங்களையும்

தோட்டங்களையும் சம்பாதித்துக்கொள்ள ஏதுவுள்ள வளானுள் அவளுடைய பசுத்தொழுவங்களில் பசுக் களின் மந்தையையும் அவைகளின் தேகபலத்தையும் புஷ்டியையும் கவனித்தால் வெகு ஆச்சரியமாயிருக் கும். மண்வெட்டி, கோடரி, கலப்பை, கூடை, பாறை முதலிய வெவ்வேறு கிருஷி சாமானங்களுக் காகவே பிரத்தியேகமான ஒரு கட்டடத்தைக் கட்டி அதிலே மேற்படி சாமானங்களை வைத்துவைப்பாள். மரப்பலகைகளினுலேயே ஒரு பெரிய கட்டடம் கட் டினுள் அதில் நவதானியங்களை நிரப்புவாள். அவள் தனக்கு ஒரு பெரிய மேட்டின்மேல் ஒரு வீட்டைக் கட்டினுள். நானுவித காய் கனிகளையும் கிழங்கு களையும் அவள் வீட்டில் சாதாரணமாய்க் காணலாம்.

அவள் வீடு மாளிகை வீடும் மேசை நாற்காலி முத லிய சாமானங்களால்நிறைந்து வெகுஅலங்காரமானதா யும் சோபித்திலங்கினது. சுத்தத்தில் அவளைப்போன் றவர்கள் அபரூபமே. மரச்சாமானங்களையெல்லாம் தேய்த்துக் கழுவி நிருமலமாய் வைப்பாள். மஞ்சத்தின் மீது படுக்கைத் தலையணையையேதவிர வேறெந்தச் சாமானத்தையும் போட்டு வையாள். மேசைகளைத் தக்க இடத்தில் வைத்துவைக்கக் கனவிலும் மறவாள். கந்தைத்துணிகளையும் பிள்ளைகளின் உடுப்பு முதலிய வைகளையும் வீட்டில் அங்குமிங்கும் மூலை முடுக்கு களிலும் சிதறியிருக்க விடாள். வீட்டின் தளத் தைக் கண்டால் சோறுண்ணப் பிரயோகிக்கலாம்; அவ்வளவு சுத்தமாயிருக்கும். அவள் வீட்டுக்குத் திடீ ரென்று போய்விட்டாலும் எல்லாம் நிருமலமாயும் செம்மையாயும் இருப்பதைக் காணலாம்.

அவள் வீட்டுக் கடுத்தவைகள் எத்தனையோ விசேஷ மானவைகளும் அதி நுதனமானவைகளுமா யிருக்கும்.

தோட்டத்தில் நிறைந்திருந்த மாமரங்களில் தொங்கிக் கொண்டிருந்த கனிகள் பார்ப்பவர்கள் மனதை இழுத்துக்கொள்ளும். எலுமிச்சம்பழங்கள் அபராஞ்ஜி, தங்கத்தினால் பழங்களுண்டாக்கிக் கட்டித் தூக்கி வைத்திருக்கிறதோ என்று சொல்லத் தக்கனையாயிருக்கும். பலாமரங்களோவெனில், வெளியே கண்டிப்பும் உள்ளே அன்பும் நிறைந்த புண்யசாலிகளைப்போல் வெளியே முள்ளுகளாலும் உள்ளே தேன் ரசம் போன்ற இனிப்பார்ந்த சுந்தரமான கனக வர்ணச் சுளைகளாலும் நிறைந்த பழங்களைச் சுமந்துகொண்டிருந்தன. அவளுடைய தோட்டத்தில் மா பலா எலுமிச்சை முதலான மரங்களும், சுரைக்காய், வண்டக்காய், பயிற்றங்காய், வெள்ளரிக்காய், பூசணிக்காய், அவரை, துவரை, கடலை முதலான பற்பல படர் கொடிகள் பல பல பரிதமாய் நிறைந்திருக்கும். விவேகானந்தம்மாள் தினம் தன் தோட்டத்திலிருந்து ஐந்துவித பதார்த்தங்களைக் கொய்து தன் நாயகனுக்கும் இஷ்டருக்கும் பங்குபோட்டுக் கொடுப்பாள். அவைகளை அப்போதே கொய்து அப்போதே சமைத்தால் வாய்க்கு வெகு ருசியைக் கொடுக்கும்.

விவேகானந்தம்மாள் தன் வீட்டில் அநேக பெண்களை வேலைக்கு அமர்த்தியிருந்தாள். அப்பெண்கள் வீட்டுக்கு ஜலம் திரட்டி வருவார்கள். தோட்டத்தின் பலன்களைக் கொய்துகொண்டு வருவார்கள்; தோட்டங்களுக்குத் தண்ணீர் இறைப்பார்கள்; பால் கறப்பார்கள்; தயிர்கடைவார்கள்; சிலர் சந்தைக்குப் போய்ப் பலன்களை விற்று பணங்கொண்டு வருவார்கள். விவேகானந்தம்மாள் அவர்களை நடத்தினவிதம் வெகு சாமர்த்திய முடையதாயிருந்தது. அவள் தானே அப்படிப்பட்ட வேலைகள் செய்தவளாகையால் அவர்க

ளுடைய கஷ்டங்களேயும் சோதனைகளேயும் நன்ருய் அறிந்து அதற்குத்தக்கபடி அவர்களே அன்பாய் நடத்தி வந்தாள். அவர்களேக் கடினவேலேயினுல் ஆயாசப் படுத்துவதோ, வீணுய்க் கோபங்கொள்வதோ, சோதனைக்கேதுவான வேலேகளுக் கனுப்புவதோ, அவர்கள் பின்னுல் திரிந்துகொண்டிருப்பதோ, அவளுக்கு வெகு தூரமாயிருந்தது. சேவகரின் வேலேவிஷயமாய் அவளுடைய மனம் எப்போதும் இளகிக்கொண்டேயிருக்கும். ஒருத்தி எதையாகிலும் சுமந்துகொண்டு ஆயாசப்பட்டு வருவதைக் கண்டவுடனே விவேகானந்தி படுந்துயரம் கொஞ்சமல்ல. உடனே அவளே அழைத்து வயிருர அன்னங்கொடுத்து, அவளோடு அன்பாய்ப் பேசி, நானுமிப்படியே கஷ்டமனுபவித்தவள். இப்படி கஷ்டப்பட்டால் தேவன் நம்மைக் காட்சிப்பார். நீ இனிமேல்சுமக்கக் கூடியவைகளேயே சுமக்கவேண்டுமல்லாது உன்பலத்தை மீறும் சுமைகளேச்சுமக்கவேண்டாம். ஐயோ உன் தலே குழி விழுந்ததுபோலாயிற்றே; கொஞ்சநேரம் இங்கே படுத்து ஆயாசந்தீரென்று சொல்லுவாள். வேலேயாட்களில் யாராகிலும் வியாதிப்படுவார்களாகில் அவர்களே சொந்த ஜனம்போல் பராமரித்து பணம் செலவழித்து வேண்டிய ஒத்தாசை செய்வாள். அவள் வீட்டில் வளர்ந்த சில பெண்களுக்கு அவளே விவாகம் செய்துகொடுத்து ஸ்திரீதனத்தோடு அவர்களேத் தம் புருஷருடன் அனுப்பும்போது அநேக புத்திமதிகளேச் சொல்லி, கடைசியில் என்னே உங்களேப்போலவே கல்யாணம் செய்து கொடுத்தார்கள்; நான் திருடாமல் அல்லது வேறெந்த துன்மார்க்கத்தையும் செய்யாமல் கடினவேலே செய்து மீதியாகச் செலவுசெய்து வந்ததினுல் தேவன் எனக்குச் சம்பத்தை அளித்திருக்கிருர். நீங்களும் போய் அப்

படியே வாழுங்களென வாழ்த்திக் கண்ணீர் சிந்தி யனுப்புவாள்.

அவள் ஏழையின்மேலும் அதிக கிருபை நிறைந் தவளாயிருந்தாள். பதின்மூன்று வயதுள்ள தன் குமா ரத்தியை தருமங் கொடுப்பதற்கென்றே நியமித்திருந் தாள். அப்பெண் பகற்காலத்தில் வரும் ஏழைகளுக்கு ஏற்றபடி அன்னம், கஞ்சி, தயிர், மோர், நெல், அரிசி, சோளம், காசு முதலிய தானங்களைக் கொடுத்தனுப் புவாள். ராத்திரியில் வருகிறவர்களுக்கு சுடச்சுட சா தங் கொடுத்தனுப்புவாள். அதன்றியும் விவேகானந் தம்மாள் 3 மாதங்களுக் கொருமுறை மேம்பாடான அன்னதான மளித்து ஏழைகளைக் களிப்பித்து அவர் களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவாள். அநேக நூறு ஜனங்கள் வந்து அவளுடைய அன்னத் தை உண்டு வயிறு வளர்த்துக்கொள்ளுவார்கள். அறுப் புக்காலத்தில் 6 மாதத்துக் கொருமுறை புதிய பலனைத் தின்பதற்குப் பலவித பதார்த்தங்களைப் பா கம்செய்து கணக்கற்ற ஏழை ஜனங்களை வரவழைக் கும்போது, அவள் வீடு தேரும் திருவிழாவுமாக இரு க்கும். ஒரு பலா, ஒரு மாமரம், 5 வாழை, 5 தென்னை, பத்துப் பனை முதலிய மரங்களுக்கு தரும விருட் சங்களெனப் பெயர்தரித்து அவைகளில் உண்டாகும் பலன்களைத் தான் தொடாமல் ஏழை ஜனங்களுக்கே தருமஞ்செய்வாள். ஒவ்வொரு வருஷமும் அவை களின் பலனை விற்று வஸ்திரம் கொண்டு ஏழை களுக்கு வஸ்திரதான மளிப்பாள்.

இப்போது அவளுடைய குடும்பத்தைக் குறித்து ஒரு வார்த்தை சொல்லுவேன். அவளுடைய புரு ஷன் ராமச்சந்திரனென்போன் தேவனால் ஒரு விசே ஷித்த ஆசீர்வாதத்தைப் பெற்றவன். அவன் நன்றாய்

வேலைசெய்யத் தக்க பலமும் மனதுமுள்ளவனுயிருந் தான். தன் பெண்சாதியின் வார்த்தைக்கு ஒப்புவா னே யல்லாது மறுக்கிறவனே யல்ல. ஏனென்றால் அவள் எப்போதும் எல்லாருடைய பிரயோஜனத்தை யே கருதி நடக்கிறவளென்று நன்றாய் அறிந்துகொண் டான். வேலைகளை ஜாக்கிரதையாய்க் கவனித்து, பொருள்களையும் தோட்டங்களையும் பாதுகாத்துவந் தான். அவனுக்கும் விவேகானந்தம்மாளுக்கும் 6 பிள் ளைகள் பிறந்தார்கள். அவர்களில் இருவர் மரித்து, மீதியான 4 பேர் சுகதேகிகளாய் வளர்ந்துவந்தார் கள்.

## VIII–ம் அத்தியாயம்.

இவ்விதமாக விவேகானந்தம்மாளுக்குத் தன சம் பத்தும் குடும்ப சம்பத்தும் உண்டாகி மகா ஐசுவரிய முள்ளவளாய்ப் போனாள். ஆகிலும் அவளுக்கு ஒரு பெரிய குறைவிருந்தது. அதென்ன? பிள்ளைகள் துஷ்டராயிருந்தார்களோ? இல்லை. ஏதாகிலும் வழக் குகளிருந்தனவோ? இல்லை. திருடரின் பயமிருந்த தோ? இல்லை. பின்னை என்ன? அவள் பகவந்த னால் பாவப் பரிகாரம்பெற்று இருதயத்தைச் சுத்தப் படுத்திக்கொள்ளாதவளா யிருந்தாள். அவள் தரும குணசீலியும் சுகுணம் நிறைந்தவளுமா யிருந்தாள் அல் லவா? பரமபதவிக்குச் சேரவேண்டுமானால் இவ்வித வெளிப்படையான லட்சணங்கள் போதாதோ? போ தாது. நாம் எத்தனைப் புண்யகிரியைகளைச் செய் தாலும் தானதர்மம் செய்தாலும் அவைகள் நம்மை

இரட்சிக்கமாட்டா. ஏனென்றால் தேனைச் சேர்க்கும் வண்டுகளிலும் நோவை யுண்டாக்கத்தக்க கொடுக்குக ளிருப்பதுபோல் உத்தமமானவர்களிலும் பாவம் கலந்திருக்கின்றது. துஷ்டர் தங்கள் துற்கிரியைகளினு லழிவார்கள். சற்குணசாலிகள் சொந்த நீதியினால் அழிந்துபோவார்கள். இவர்கள் தங்கள் சற்கிரியைகளை முழுமையும் சுத்தஞ்செய்யச் சக்தியற்றிருப்பதால் நாசமாய்ப் போவார்கள். இச்சத்தியத்தைப்போல் விவேகானந்தம்மாளுக்குப் பெருத்த சம்பத்தும், உத்தமமான மக்களும், குணவந்தனை பர்த்தாவும், நல்ல குணமும் அபரூப உதாரசீலமும் இருந்தாலும், அவள் மோட்சலோகம் போகப் பாத்திரமானவளா யிருந்ததில்லையென்று காணலாம். இப்படிப்பட்டவளுக் கிது குறைவல்லவா? ஆனால், தேவானுக்கிரகத்தினால் அக்குறைவும் நீங்கிற்று

இயேசுரட்சகரின் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஒரு வேதாகமப் பெண்பிள்ளை அவளுடைய வீட்டுக்குப் போய் அவளுக்கு அட்சரம் படிப்பித்துவந்தாள். இவள் சத்திய வேதத்தை நன்றாய் வாசிக்கத்தக்கதாக அப்பியாசம் பண்ணுவித்தபிறகு ஒருநாள் அவளைப் பார்த்து, அம்மா, நீ இரட்சிப்படைய வேண்டும்; அது ஒன்று பூரணமானால் உன் ஜென்மம் உத்தம ஜென்ம மென்பதற்கு சந்தேகமில்லை என்று சொல்லும்போது, அவள் இரட்சிப்பு என்றால் என்ன? என்று கேட்டாள். அப்போது அந்த வேதாகம ஸ்திரீயானவள், பெண்ணே, இரட்சிப்பென்றால் பாவப் பரிகாரம். யேசுநாதர் நமதெல்லாப் பாவங்களையும் மன்னித்து, இருதயத்தில் சமாதானத்தைக் கொடுத்து, நாம் மறுபடியும் பாவம்செய்யாதபடிக்கு நம திருதயத்தில் திவ்ய ஆசையை வேரூறச் செய்து, நம்

மைப் பவித்திராகச் செய்து, நாம் மரித்தபின் நம்மை மோட்சத்துக்கு ஏறச்செய்வதே இரட்சிப்பு. அம்மா, ஆ பரலோகாநந்தம் இதுதானென்று சொல்ல எந்தக் கண்ணும் கண்டதில்லை. எந்தச் செவியும் கேட்டதில்லை. யாராலும் விவரிக்கவும் முடியாது.

அங்கே சுவாமி இயேசு தம்மை விசுவாசித்திருக்கும் தமது பக்தருடைய கண்களைத் துடைப்பார். இவ்வுலக சம்பத்து நாசமாய்ப் போய்விடும். அங்கேயிருக்கும் சுகம் நித்தியமானது. அங்கே நாம் மகிமையுள்ள சரீரத்தைத் தரித்துக்கொண்டு நமது சிருஷ்டிக் கர்த்தாவைத் துதித்துக்கொண் டிருப்போம்; தேவன் இந்தப் பாக்கியத்தைத் தம்மை விசுவாசிக்கும் பேர்களுக்கு அருளிச்செய்வார் என்றாள்.

இவ்வார்த்தைகளை விவேகானந்தம்மாள் சிறுபிள்ளைபோல் யதார்த்தமாய் நம்பினாள் ஆகையால் அவள் அன்னாளோடு (அன்னாள் என்பது அந்த வேதாகம ஸ்திரீயின் பெயர்.) இந்த ரட்சிப்பை நானெப்படி பெற்றுக்கொள்ளக் கூடும்? என்றாள். அன்னாள், நீ உன் மனதினாலும், வாக்கினாலும், காயத்தாலும், அநேக சூட்சும பாவங்களைச் செய்திருப்பாய். நீ மற்றப் பெண்பிள்ளைகளைவிட நல்லவளாயிருந்தாலும் பவித்ர பகவந்தனுக்கு முன் உன் சுகுணங்கள் மோட்சலோகத்துக்கு யோக்யமானவைகளல்ல. ஆகையால் உன் பாவங்களை நினைத்து அவைகளுக்காக உத்தம மனஸ்தாபப்படவேண்டும். அதல்லாமலும் இரட்சிப்புக்கு ஆதாரமான இயேசுநாத சுவாமியைப் பூரணமாய் விசுவாசிக்கவேண்டும். அதுவே முக்கிய காரியம். அவர் உன் பாவங்களுக்கு வரத்தக்க தண்டனைகளெல்லாவற்றையும் சிலுவையில் உத்தரித்து மரித்து எழுந்து தமது பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில்

யோய் வீற்றிருக்கிறார். அங்கிருந்துகொண்டு உனக்காகவும் எனக்காகவும் சர்வ லோகத்தாருக்காகவும் பரிந்துபேசும் தொழிலிலிருக்கிறார். ஆகையால் அவரை நினைத்து உன் பாவங்களை அவரிடத்தில் அறிக்கையிட்டு அழுது கண்ணீர் வடித்து அவருடைய பிராயச்சித்தம் உன் பாவங்களையும் அறக் கழுவிப் போடும் என்று நம்பி பாவப் பரிகாரத்துக்காக பூரண இருதயத்தோடு வேண்டிக்கொள். அப்போது நீ இரட்சிக்கப்படுவாய் என்றாள்.

விவேகானந்தம்மாள் அவ்வார்த்தைகளை வெகு கவனத்தோடு கேட்டுக்கொண்டிருந்தாள். புருஷன் வந்தபின், அவனுக்கும் இவ்வார்த்தைகளைச் சொல்லி அவனும் தன்னோடு இப்பரம பதவிக்கு பங்காளியாக வேண்டுமென்று தெரிவித்தாள்; அவனும் நம்பினான். இதன்விஷயமாய் இன்னும் அதிகமானவைகளை அறியவேண்டுமென் றாலோசித்துத் தங்கள் மனோபாவனையை அன்னாளோடு தெரிவித்தபோது, அவள், நீங்கள் இவ்வூரில் உத்தம போதகராயிருக்கும் யேசுதாசையரிடம் விசாரித் தறிந்துகொள்ளலாம்; பிறகு அவரால் கிறிஸ்துவின் நிஜமான மந்தையில் சேர்க்கப்படுவீர்கள் என்றாள்; அவர்களிருவரும் அப்படியே அப்போதகரிடம் போய்த் தங்க ளபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். அப்போதகர் அவர்களை அங்கீகரித்து அவர்களுடைய இச்சையின்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணத் தொடங்கினார். இயேசு சுவாமி ஏன் நராவதாரம் பண்ணினார்? அவருடைய பாடு, மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல், இவைகளின் பலன் என்ன? கிறிஸ்து என்பவர் யார்? ஞானஸ்நானமென்றால் என்ன? என்பவைகளைப்பற்றி விஸ்தாரமாய் விவரித்துச் சொன்னார். வெளித்தோற்

றத்தின்படி மாறினவளல்ல. இருதயத்துள் மாறினவர்களே கிறிஸ்தவள், கிறிஸ்தவன்; கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள்ளும், கிறிஸ்து கிறிஸ்தவனுக்குள்ளும் நிலைப்படவேண்டும். இதே கிறிஸ்தவர்களின் இலட்சணம் என்று உபதேசித்து அவர்களுடைய விசுவாசத்தைப் பரீட்சித்து, அவர்களுடைய ஆத்மீக சந்தோஷத்தோடு கூடவே அவர்களுக்கு தீட்சை கொடுத்து அவர்களைக் கிறிஸ்தவர்களின் சமுதாயத்துக்குள் சேர்த்துக்கொண்டார்.

அப்போது விவேகானந்தம்மாள் தன் நாயகனோடு, இயேசுரட்சகரே நமது ஜீவன்; அவர் நமக்ககப்படாவிட்டால் நமது சர்வசம்பத்துகளும் பரிமளமற்ற புஷ்பத்தைப்போலும், ஜீவனற்ற சரீரத்தைப்போலு மிருந்திருக்கும்; ஆனால் இப்போது அவர் நமக்குக் கிடைத்திருப்பதனால் மோட்ச சந்தோஷமுழுமையும் நமதிருதயத்துள் ஒன்றாய்ச் சேர்ந்ததுபோலிருக்கிறது என்றாள். அதற்கவன் மலர்ந்த முகத்தோடு சரிதான் என் அன்பானவளே என்றான்.

## IX-ம் அத்தியாயம்.

இக்கதையை முடிக்குமுன் ரமணியையும் அவளுடைய வீட்டையும் குறித்துக் கொஞ்சம் பேசவேண்டும். ரமணி வேலியில்லாத பயிர்போலவும், புழுப்பிடித்த விருட்சம்போலவும் வரவர முழுமையும் கெட்டுப்போனாள். அவளுடைய நகைகளெல்லாம் அழிந்துபோயின; அவளுடைய வீட்டுச் சாமானங்களெல்லாம் விற்பனையாயின; அவளுடைய

நிலம் தோட்டங்களெல்லாம் அந்நியருக்குச் சொந்தமாயின; அவளுடைய புருஷனுக்குப் பைத்தியங் கண்டு கதியற்றவனாய் அங்கங்கே திரிந்து அகால மாணமடைந்தான். அவளுடைய பிள்ளைகள் அன்னவஸ்திரமின்றிக் கஷ்டப்பட்டார்கள். முத்தைப்போலிருந்தவள் கந்தைத்துணியும் கரிக்கோலமுமாய் விட்டாள். கடைசியாக அவளுடைய வீடும் கைம்மாறி விட்டது. ஆரம்பத்திலேயே அவளுடைய வீட்டின் மேல் 800 ரூபாய் அடமானமானதல்லவா? அடகுகாரன் வட்டிக்கும் அசலுக்கும் பிரியாதுசெய்து கோர்ட்டுச் செலவு முதலியவைகளையும் சேர்த்து 1,200 ரூபாய்க்குப் பைசலாக்கிக்கொண்டான். வீட்டை ஏலம் போடும்போது விவேகானந்தம்மாள் தன் புருஷனை அனுப்பி அவ்வீட்டை ஏலத்தி லெடுத்துக் கொண்டாள்.

வீடு விவேகானந்தம்மாள் கைவசமானவுடன் ரமணி தன் பிள்ளைகளைக் கையிற் பிடித்துக்கொண்டு விவேகானந்தம்மாளண்டை போய்த் தன் அகங்காரத்தை மறைத்து, கொழுப்பேறினால் உதிரத்தைக் குடித்துவிடுவேன்; கொழுப்புக் கரைந்தால் சாணத்தையும் தின்பேன் என்பதைப்போல, அம்மா! எனக்கு வேறு கதியில்லை; மேலே நோக்கினால் ஆகாயத்தையும் கீழே நோக்கினால் பூமியையும் தவிர வேறொன்றையுங் காணேன். உண்ண அன்னமில்லை, உடுக்க வஸ்திரமில்லை, விழுந்துகிடக்க ஒரு சிறு துண்டுப் பாயுமில்லை; மறைவாயிருக்க மனமில்லை; ஏது மற்ற அநாத பெண்பிள்ளையான என்னையும் என் மக்களையும் நீயே ரட்சிக்கவேண்டும்; உன் வீட்டில் எத்தனையோபேர் வேலைசெய்து பிழைக்கிறார்கள். அப்படியே நாங்களுங்கூட எம்மாலான வேலையைச்

செய்வோம்; எங்களைக் காப்பாற்றவேணுமம்மா! என்று தேம்பித் தேம்பி யழுதாள். உடனே விவேகானந்தம்மாள் ரமணியின் கழுத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு சிறுபிள்ளை யழுகிறதுபோல், குரல் விட்டழுதாள். பிறகு ரமணியோடு, நீயும் உன் பிள்ளைகளும் எங்களோ டிருக்கவேணும்; எனக்கு மெத்த சந்தோஷம்; நீ கஷ்டவேலை செய்தவளல்ல; வீட்டுவேலையை ஜாக்கிரதையாய்க் கவனித்துக்கொண்டிரு. உன் சொந்த வீடுபோ லெண்ணியிருந்து சந்தோஷ சமாதானத்தோ டிருந்துகொள். பிள்ளைகளை இனிமேலாகிலும் ஜாக்கிரதையோடும் கண்டிப்போடும் தெய்வபயத்தோடும் வளர்க்க முயற்சிசெய். இரட்சகனாகிய இயேசு சுவாமி உன்னையும் உன் பிள்ளைகளையும் பரிபாலிப்பாராக என்றாள்.

ரமணி விற்ற வீடு மிக விஸ்தாரமானது. அதன் சமீபத்தில் அழகான தாமரைக்குளங்களும் மடுக்களுமிருந்தன. கடலோரம் சமீபத்திலிருந்தது. விவேகானந்தம்மாளுடைய நிலங்கள் முக்கால்வாசி யங்கே இருந்தன. ஆதலால் அவள் அதையே தன் வாஸஸ்தான மாக்கிக்கொண்டாள்; ரமணியும் தன் பிள்ளைகளும் அவளோடு தங்கியிருந்து அதேவீட்டில் ஊழியம் செய்து ஜீவித்தார்கள்.

ஓஹோ! இதென்ன புதுமை! இதை வாசிக்கும் சகோதரியே, நீ இதை நன்றாய்க் கவனி, எஜமாட்டி வேலைக்காரியும் வேலைக்காரி எஜமாட்டியுமாக மாறிவிட்டார்கள்.

சிநேகிதியே! உன் வீடு உத்தமியாகிய விவேகானந்தம்மாளின் வீடுபோலிருக்கிறதா? அல்லவென்றால், அதமியாகிய ரமணியின் வீடுபோலிருக்கிறதா? ஆலோசித்துப் பார். கெட்டவளாகிய ரமணியின் குணம்

உனக்கிருந்தால் அவைகளை அரிசியிலிருக்கிற நெல்லைப்
பொறுக்கி யெடுப்பதுபோல் இப்புது வருஷத்திலா
கிலும் பொறுக்கி யெறிந்துபோடு. ஏனென்றால் ஆகா
யத்துக்குச் சந்திரன் வெளிச்சத்தைக் கொடுப்பது
போல், வீட்டுக்கு உன் சுகுணங்களே பிரகாசத்தைக்
கொடுக்கவேண்டும். வீட்டுக்கு வெளிச்சத்தைப்போ
விருக்கத்தக்க உன் குணங்கள் கெட்டுப்போனால்,
உன் வீடு சந்திரனற்ற அமாவாசைக் கருக்கலைப்போல்
இருண்டு பயங்கர நிலைமையில் ஆய்விடும். ஆகை
யால் அவகுணத்தைப் போக்கி நற்குணசாலியாய்
மாறிவிடு. உன் வீடு விவேகானந்தம்மாளின் வீட்
டைப்போல இருக்குமானால், தேவனுக்கு ஸ்தே
திரம். இன்னுங்கூட அதைச் சகல பாக்கியங்களா
இலங்கி வர்த்திக்கச்செய். தேவாசீர்வாதத்
ஆண்டகையை மன்றாடிச் சுபமாய் வாழ்ந்து
யில் மோட்சஞ்சேர். அங்கே சதாநித்திய
சௌபாக்கியத்தோடிருப்பாய்.

S. P. C. K. Press, Vepery, Madras—1906.

| | அ. | பை. |
|---|---|---|
| ஞானரசவாதம் ... ... ... ... | 2 | 0 |
| ஞான[illegible]லா ... ... ... ... ... | 1 | 0 |
| தாவீதின் சரித்திரம் ... ... ... ... | 1 | 0 |
| தியான ஆலயம் ... ... ... ... | 8 | 0 |
| திரு அவதாரமாலை ... ... ... ... | 3 | 0 |
| தினதீபிகை ... ... ... ... ... | 2 | 0 |
| தினேதயம் ... ... ... ... ... | 6 | 0 |
| துக்கசாகரத்தோணி ... ... ... ... | 1 | 6 |
| தெளிவான பிரசங்கங்கள் ... ... ... | 8 | 0 |
| தேவபத்தியின் வளர்ச்சி ... ... ... | 1 | 0 |
| ...வாப நிஷதம் ... ... ... ... | 1 | 6 |
| ...னெறிக் குறிப்பு ... ... ... ... | 1 | 0 |
| ...ானந்தக் காதல் ... ... ... ... | 1 | 0 |
| ...ரத்திஞகரம் ... ... ... ... | 1 | 0 |
| ...முப்பு ... ... ... ... | 1 | 0 |
| ... மோட்சபிரயாணம் ... ... | 10 | 0 |
| ...ளா ... னங்கள் ... ... ... ... | 2 | 0 |
| ...மியின் ...ன் ... ... ... ... | 1 | 0 |
| ...பரணஜெயம் ... ... ... ... ... | 1 | 0 |
| மாதர் தம்பி ... ... ... ... ... | 1 | 0 |
| மாலைத்தியானம் ... ... ... ... | 8 | 0 |
| மூடி என்பவரின் பிர...ங்கங்கள் ... ... ... | 2 | 0 |
| மேசியா மகத்துவம் ... ... ... ... | 3 | 0 |
| யாத்திரைச்சிந்து ... ... ... ... | 2 | 0 |
| ரோமான்மார்க்க சீர்தூக்க நூல் ... ... | 1 | 0 |
| விசுவாசிகளின் ஜெயம் ... ... ... ... | 2 | 0 |
| வியாதிப் படுக்கைத் தோழன் ... ... ... | 1 | 6 |
| வேதபுருஷர் (முதலாம் பங்கு.) ... ... | 12 | 0 |
| ,, (2-ம், 3-ம் பங்கு.) ஒவ்வொன்று ... | 8 | 0 |
| வேதப்பொருட் கண்ணுடி ... ... ... | 8 | 0 |
| வேதாகம பிரசித்த விர்த்தாந்தம் ... ... | 8 | 0 |
| வேதியரொழுக்கம் ... ... ... ... | 3 | 0 |

சென்னபட்டணத்துச்

## சன்மார்க்கச் சிறுபுத்தக சங்கத்தார்

# விற்பனைசெய்யும் புத்தகங்கள்.

| | அ. | பை. |
|---|---|---|
| அன்ரூட வேதவாசிப்புத் தியானம் | 8 | 0 |
| அன்னாள் சத்தியநாதன் அம்மாள் ஜீவியம் | 1 | 6 |
| ஆதியாகம வியாக்கியானம் | 10 | 0 |
| ஆத்துமநேசரின் அங்கமகத்துவம் | 4 | 0 |
| ஆத்தும வினாவுக்கு தேவவிடை | 3 | 0 |
| இந்திய கிறிஸ்தவர்களின் குடும்ப ஜெபங்கள். | 1 | 0 |
| இந்திய கிறிஸ்தவர்களின் ஜீவிய சரித்திரம் | 6 | 0 |
| இந்துமத கண்டனம் | 1 | 0 |
| எலியாவின் சரித்திரம் | 3 | 0 |
| என் இராஜா | 2 | 0 |
| ஏசாயா தீர்க்கதரிசன வியாக்கியானம் | 10 | 0 |
| கமலம்: ஒரு ஹிந்துவின் குடும்ப ஜீவிய சரிதை. | 6 | 0 |
| காலை மணிச்சத்தம் | 2 | 0 |
| கிரணமாலிகை | 6 | 0 |
| கிறிஸ்தரசன் சரிதை | 3 | 0 |
| சகுணா: ஒரு சுதேச கிறிஸ்தவ ஜீவிய சரிதை. | 6 | 0 |
| சத்தியநாதன் ஐயரின் சரித்திரம், சங். உ. தோ. | 4 | 0 |
| சமயபரீட்சை | 12 | 0 |
| சாதாரண இந்துமார்க்கம் | 2 | 0 |
| சுந்தரமுத்துக் கதை | 1 | 0 |
| தியான சோலை | 1 | 6 |
| திருச்சபை சரித்திரம் | 12 | 0 |
| திருப்போர் | 10 | 0 |
| பரதகண்ட புராதனம் | 2 | 0 |
| பாடுபட்ட சரித்திரதியானம் | 10 | 0 |
| போதக தீபிகை | 6 | 0 |
| மாதர் பூஷணம் | 4 | 0 |